Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ் Mirror
www.tamilmirror.lk

TUESDAY, JUNE 13, 2023

செவ்வாய்க்கிழமை ஜூன் 13, 2023 | ஒளி: 09 கதிர்: 017 | பக்கம்:07 | நகரப்பதிப்பு | FREE

# சாடினார் ஜனாதிபதி விலகினார் அநுர

ஜனாதிபதியால் தான் சாடப்பட்டு சில நாள்களுக்குப் பின்னர், தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் அநுர மனதுங்க தனது இராஜினாமா கடிதத்தை அமைச்சின் செயலாளரிடம் கையளித்துள்ளதாக அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்தார்.

தொல்பொருள் பணிப்பாளர் நாயகம் தனது இராஜினாமா கடிதத்தை அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைத்துள்ளதுடன், கடிதத்தின் பிரதியும் தனக்குக் கிடைத்துள்ளதாக தெரிவித்த அமைச்சர், பதவி விலகலுக்கான காரணம் எதுவும் தெரிவிக்கப்படவில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

தொல்பொருள் பகுதியொன்றுக்கு காணிகளை வழங்குவது தொடர்பான பிரச்சினை தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பணிப்பாளரை கடுமையாக சாடியதை அடுத்தே அவர் இராஜினாமா செய்தாக அறிய முடிகிறது.

தொடர்ச்சி P2



## "எனக்கு வரலாறு புகட்டுகிறீர்களா?"

### தொல்பொருள் அதிகாரியிடம் ஜனாதிபதி கேள்வி



தொல்பொருள் பகுதிக்கு காணி ஒதுக்கீடு தொடர்பான பிரச்சினை தொடர்பில் "நீங்கள் எனக்கு வரலாற்றை கற்பிக்க முயற்சிக்கிறீர்களா? அல்லது நான் உங்களுக்கு கற்பிக்க விரும்புகிறீர்களா?" என்று தொல்பொருள் திணைக்கள அதிகாரியிடம் கேள்வியெழுப்பிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தொல்பொருள் திணைக்கள அதிகாரிகளை கடுமையாக சாடியுள்ளார்.

தொடர்ச்சி P2

## 300 போதை மாத்திரைகளுடன் ஒருவர் சிக்கினார்



இலங்கை கடற்படை மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் இணைந்து வவுனியா கோவில்குளம் சந்திக்கு அருகில் நடத்திய விசேட தேடுதல் நடவடிக்கையின் போது, விற்பனைக்காக கொண்டு சென்ற 300 ப்ரீகபலின் மாத்திரைகளுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2




துல்ஹிரிய விபத்தில்

## ஒரே குடும்பத்தை சேர்ந்த 3 பேர் பலி

கொழும்பு - குருநாகல் பிரதான வீதியின் துல்ஹிரிய பகுதியில் திங்கட்கிழமை (12) காலை 5.30 மணியளவில் டிப்பர் வாகனமும் ஓட்டோவும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உயிரிழந்துள்ளதாக வரக்காபொல பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

மத்திய, மேல் மாகாணங்களில்

## கால் நடைகளுக்கு தோல் நோய் பரவல்



மத்திய மற்றும் மேல் மாகாணங்களில் பல பகுதிகளில் தோல் நோயால் பாதிக்கப்பட்ட கால்நடைகள் கண்டறியப்பட்டுள்ளதாக அரச கால்நடை வைத்தியர் சங்கத்தின் தலைவர் டொக்டர் சிசிர பியசிறி தெரிவித்தார்.

வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களில் இந்நோய் அதிகமாக காணப்படுவதாகவும், பரவலைக் கட்டுப்படுத்த கால்நடைகளை கொண்டு செல்வதற்கு தடை விதித்தல் போன்ற கடுமையான நடவடிக்கைகளை அதிகாரிகள் மேற்கொண்டுள்ளதாகவும் கூறினார்.

தொடர்ச்சி P2

ரணிலின் அரசாங்கத்தை கைப்பற்ற

## ஒன்றிணைந்த எதிரணியை உருவாக்குவதே நோக்கம்



### அழகப்பெரும தெரிவிப்பு

### சஜித்தின் கட்சியும் மந்திராலோசனை

ரணில் விக்ரமசிங்கவின் அரசாங்கத்தைக் கைப்பற்றும் குறைந்தபட்ச இலக்குடன் ஒன்றிணைந்த எதிரணியை உருவாக்குவதே சுதந்திர மக்கள் காங்கிரஸின் நோக்கம் என்று அக்கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சி உறுப்பினருமான டலஸ் அழகப்பெரும, திங்கட்கிழமை (12) தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## சிறுவர்கள் கூலிகளாகும் அபாயம் காணப்படுகிறது

நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார மற்றும் சமூக நிலைமை காரணமாக சிறுவர்கள் கூலித் தொழிலாளர்களாக பயன்படுத்தப்படும் அபாயம் காணப்படுவதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை எச்சரிக்கை விடுத்துள்ளது.

பாடசாலையிலிருந்து இடைவிலகும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கும், மாணவர்களை பாடசாலைக்கு தொடர்ச்சியாக அனுப்பாமல் இருப்பதற்கான சாத்தியக்கூறுகளும் இருப்பதாக அந்த அதிகார சபை சுட்டிக்காட்டியுள்ளது.

தொடர்ச்சி P2

## தந்தையின் தாகத்தால் மரணமான மகன்



எச்.எம்.எம்.பர்ஸான்

தந்தையின் தாகம் தீர்க்க தென்னை மரத்தில் ஏறிய மகன் தவறி விழுந்து பலியான சம்பவமொன்று சந்திவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சித்தாண்டி பகுதியில் ஞாயிற்றுக்கிழமை (11) இடம்பெற்றுள்ளது.

தொடர்ச்சி P2




இரண்டு நாள்களுக்கு

## காய்ச்சல் இருந்தால் சிகிச்சை கட்டாயம்

இரண்டு நாள்களுக்கு மேல் காய்ச்சல் இருப்பவர்கள் கட்டாயம் வைத்திய சிகிச்சை பெற வேண்டும் என்று அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் டொக்டர் ஹரித அலுத்கே தெரிவித்தார்.

காய்ச்சலால் பாதிக்கப்பட்ட ஒருவர் ஓய்வு எடுப்பதே மிக அவசியம் என்றும் நாளாந்த நடவடிக்கைகளில் இருந்து தனிநபர்கள் போதுமான ஓய்வு பெறுவது அவசியம் என்றும் சுட்டிக்காட்டினார்.

தொடர்ச்சி P2



## ரூபாயின் பெறுமதி திடீரென சரிந்தது

கடந்த வாரத்துடன் ஒப்பிடுகையில் அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி திங்கட்கிழமை (12) வீழ்ச்சியடைந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கை மத்திய வங்கி வெளியிட்ட நாணய மாற்று விகிதங்களின் அடிப்படையில் டொலரின் கொள்வனவு விலை 290 ரூபாய் 06 சதமாகவும் விற்பனை விலை 303 ரூபாய் 73 சதமாகவும் பதிவாகியுள்ளது.

தொடர்ச்சி P2

## வரித் திருத்தத்துக்கு எதிராக மீண்டும் பணிப்புறக்கணிப்பு

அண்மைய வரி திருத்தத்துக்கு எதிராக மீண்டும் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாக அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

தொழில் வல்லுநர்களுக்கு சுமையாக உள்ள அண்மைய வரி அதிகரிப்பை திருத்து வதற்கான திட்டத்தை அரசாங்கம் அறிவிக்க வேண்டும் என்று சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் டொக்டர் சமில் விஜேசிங்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



டியாகோ கர்சியா

## இலங்கையர்கள் குறித்து தகவல்கள் சேகரிப்பு

பிரித்தானியாவுக்கு அருகிலுள்ள டியாகோ கர்சியா தீவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கையர்கள் தொடர்பான தகவல்களை சேகரித்து வருவதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கையிலுள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயம் மற்றும் பிரித்தானியாவிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயம் ஆகியவற்றுடன் தொடர்ச்சியாக தொடர்புகொண்டு தகவல்களைக் கேட்டறிந்து வருவதாக வெளிவிவகார அமைச்சு

தொடர்ச்சி P2

## மாணவர்களின் நடவடிக்கை மனவேதனை அளிக்கிறது

டி.ஷங்கீதன்



க.பொ.த சாதாரண தர பரீட்சையின் பின்னர் மாணவர்கள் நடந்து கொள்கின்ற விதம் மிகவும் கவலைக்குரியதாகவும் மனவேதனை தருவதாகவும் இந்த விடயம் தொடர்பாக பெற்றோர்கள், ஆசிரியர்கள், சமூக ஆர்வலர்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்றும் முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்படுள்ளதாவது: மாணவர்களின் ஒழுக்கம் தொடர்பாக தற்பொழுது அனைத்து தரப்பினரும் பேசுகின்ற ஒரு நிலைமை ஏற்பட்டுள்ளது. இந்த நிலைமையானது மிகவும் கண்டிக்கத்தக்க ஒரு விடயமாகும்.

தொடர்ச்சி P2

# ரயில் மோதி அதிபர் பலி




ஆ.ரமேஸ்

நானு ஓயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இரதாலை-கிறேட்வெஸ்டன் ரயில் நிலையத்துக்கு இடைப்பட்ட பகுதியில், பதுளையிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த பயணிகள் ரயிலில் மோதுண்டு அதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக நானு ஓயா பொலிஸார் தெரிவித்தனர்.

ஞாயிற்றுக்கிழமை (11) பிற்பகல் 3.30 மணியலவில் இடம்பெற்ற விபத்து சம்பவத்தில் நானு ஓயா, இரதால்ல தமிழ் வித்தியாலயத்தில் கடமையாற்றும் அதிபரான கதிர்வேலு சுப்பிரமணியம் (வயது 52) என்பவர் உயிரிழந்துள்ளார்.

க.பொ.த சாதாரண தர பரீட்சைக்கான பாடசாலைகளுக்கு விடுமுறை

தொடர்ச்சி P2



## நச்சு மீன் உண்ட தாயாரும் உயிரிழப்பு

கனகராசா சரவணன்

மட்டக்களப்பு, மாங்காடு பிரதேசத்தில் நச்சுத்தன்மை கொண்ட மீனை உட்கொண்டு ஒருவர் உயிரிழந்த நிலையில், அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த 54 வயதுடைய பெண் ஒருவர் சிகிச்சை பலனின்றி ஞாயிற்றுக்கிழமை (11) இரவு உயிரிழந்துள்ளதாக களுவாஞ்சிக்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## “எனக்கு வரலாறு புகட்டுகிறீர்களா?”

ஜனாதிபதி மற்றும் தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடனான சந்திப்பின் போதே இந்த உரையாடல் இடம்பெற்றுள்ளதாக அறியமுடிகிறது.

குறித்த தொல்பொருள் பகுதிக்காக சுமார் 270 ஏக்கர் காணியை கையகப்படுத்த திட்டமிட்டுள்ளதாக தொல்பொருள் திணைக்கள அதிகாரி தெரிவித்த போது, அது மகா விகாரையை விட பெரியதா என்று ஜனாதிபதி அவரிடம் கேள்வியெழுப்பியுள்ளார்.

“உங்களுக்கு ஏன் 275 ஏக்கர் தேவை? என்றும் இது மகாவிகாரையை விடப் பெரியதா? மகா விகாரை, ஜேதவனாராமய மற்றும் அபயகிரி ஆகிய விகாரைகளுக்கே 100 ஏக்கர் தேவைப்படாது என்று ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

## தந்தையின் தாகத்தால் மரணமான மகன்

தந்தையும் மகனும் சித்தாண்டியிலுள்ள தனது உறவினர் ஒருவரது மரக்கறி விற்பனை நிலையத்துக்கு கடந்த 9 ஆம் திகதி சென்றிருந்தனர். தந்தைக்கு உடற்சோர்வுடன் களைப்பும் ஏற்பட்டதால் “தாகத்தை தணிக்க அருகிலுள்ள சுமார் 20 அடி உயரமுள்ள தென்னை மரத்தில் இளநீர் ஆய்ந்து கொடுப்பதற்காக மகன் ஏறியுள்ளார். தந்தை பார்த்துக்கொண்டிருக்கும் போதே மகன் தவறி விழுந்து உணர்விழந்துள்ளார்.

உடனடியாக மாவடிவேம்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட மகன், மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளார்.

சந்திவெளி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் வேண்டுகோளை ஏற்று, மரண விசாரணைகளை முன்னெடுக்க மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு சென்ற பிரதேச மரண விசாரணை அதிகாரி எம்.எஸ்.எம். நஸீர், சடலத்தை பார்வையிட்டபோது, வெளிக்காயங்கள் எதுவுமில்லாததால் உடற் கூற்று பரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

பிரேத பரிசோதனை முடிவில், தலையும் கழுத்தும் பலமாக தாக்குண்டு மூளை வீக்கமடைந்து உள்ளக இரத்தக்கசிவும் ஏற்பட்டதால் மரணம் சம்பவித்திருப்பது கண்டறியப்பட்டது.

இவ்வாறு மரணமடைந்தவர் சித்தாண்டி -2 முருகன் கோவில் வீதியைச் சேர்ந்த 21 வயதுடைய விஜயகுமார் தனுஷன் எனும் இளைஞராவார்.

மரணமடைந்த இளைஞனின் சடலம் குடும்பத்தாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## இலங்கையர்கள் குறித்து தகவல்கள் சேகரிப்பு

குறித்த இலங்கையர்களுக்கு தமது விருப்பத்தின் அடிப்படையில் நாடு திரும்புவதற்கான வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

20 மாதங்களுக்கும் மேலாக தீவில் தங்கியுள்ள 89 இலங்கை புகலிடக் கோரிக்கையாளர்கள் பாரிய நெருக்கடிக்குள்ளாகியுள்ளதாக பிபிசி சர்வதேச செய்திச்சேவை அறிக்கை வெளியிட்டிருந்தது.

2021 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதமளவில் குறித்த புகலிடக் கோரிக்கையாளர்கள் நிர்க்கதிக்குள்ளாகினர் என்றும் கொவிட்-19 பெருந்தொற்று பரவிய காலப்பகுதியில் பிரித்தானிய இராணுவ வீரர்களை தனிமைப்படுத்துவதற்காக கட்டப்பட்ட தற்காலிக கூடாரங்களிலேயே அவர்கள் தங்கியுள்ளதாக அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்தனர்.

இவர்கள் தொடர்பான சட்ட நடவடிக்கைகளில் பிரித்தானிய பொலிஸார் தற்போது கவனம் செலுத்தியுள்ளதாக பிபிசி செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

# சாடினார் ஜனாதிபதி விலகினார் அநுர

ஜனாதிபதி அவரிடம் “நீங்கள் எனக்கு வரலாற்றை கற்பிக்க முயற்சிக்கிறீர்களா? அல்லது நான் உங்களுக்கு கற்பிக்க விரும்புகிறீர்களா?” என்று கேள்வி எழுப்பி சாடியதாக தெரிவிக்கப்படுகிறது.

## கால் நடைகளுக்கு தோல் நோய் பரவல்



இவ்வாறான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் இந்நோய் நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் பரவியுள்ளதாக தெரிவித்த வைத்தியர், பரவலை கட்டுப்படுத்த அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

மத்திய, ஊவா மற்றும் வடமேல் மாகாணங்களில் கால்நடைகளுக்கு இந்நோய் பரவினால் பாற்பண்ணை தொழில் பாதிக்கப்படும் எனவும் நோயைக் கட்டுப்படுத்த தடுப்பூசி போடுவதை ஆரம்பிக்குமாறு அவர் பரிந்துரைத்தார்.

இந்த நோய் காரணமாக பால் உற்பத்தி குறைவதாகவும் எனினும் மூன்று வாரங்களில் நோயைக் குணப்படுத்த முடியும் என்றும் தெரிவித்த வைத்தியர், பலவீனமான விலங்குகளுக்கு குறித்த நோய் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் சில சமயங்களில் அவை உயிரிழக்கக் கூடும் என்றும் சுட்டிக்காட்டினார்.

எனவே தோல் நோய் பரவுவதைக் கட்டுப்படுத்த கடுமையான மற்றும் உடனடி நடவடிக்கைகளை எடுப்பதன் முக்கியத்துவத்தை அவர் வலியுறுத்தினார்.

## காய்ச்சல் இருந்தால் சிகிச்சை கட்டாயம்



பாடசாலை அல்லது பணிக்கு செல்லுவோர் சில நாள்கள் வீட்டில் ஓய்வெடுக்க வேண்டும் என்றும் திரவ உட்கொள்ளலை அதிகரிக்க வேண்டும் என்றும் தெரிவித்த வைத்தியர், காய்ச்சலைக் கட்டுப்படுத்த பாரசிட்டமோல் மருந்தை உட்கொள்ளலாம் என்றார்.

எவ்வாறாயினும், காய்ச்சலால் பாதிக்கப்பட்ட நபர்கள் டிஸ்பிரின், அஸ்பிரின் அல்லது இதுபோன்ற மருந்துகளை உட்கொள்வதைத் தவிர்க்க வேண்டும் என்றும் டெங்கு நோயால் பாதிக்கப்பட்ட ஒருவர் டிஸ்பிரின் அல்லது அஸ்பிரின் போன்ற மருந்துகளை உட்கொண்டால் அது கடுமையான சிக்கல்களுக்கு வழிவகுக்கும் என்றும் சுட்டிக்காட்டினார்.

சில சமயங்களில் அது உயிரிழப்பைக் கூட ஏற்படுத்தலாம் என்று குறிப்பிட்ட அவர், இரண்டாவது நாளில் காய்ச்சல் கட்டுக்குள் வரவில்லை என்றால், நபர்கள் மருத்துவ உதவியை நாட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

## ரயில் மோதி அதிபர் பலி

வழங்கப்பட்டு மீண்டும் திங்கட்கிழமை (12) பாடசாலை ஆரம்பமாகும் நிலையில், பாடசாலையை சிரமதானம் செய்த பின்னர், லூசா கல்கந்தை தோட்டத்துக்கு வழமை போல ரயில் பாதையில் நடந்து சென்ற வேளையில் ரயில் மோதி வீசப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

அதிபரை மோதிய ரயில் நிறுத்தப்படாமல் சென்றுள்ளதாகவும் பின்னர் ரயில் பாதை கண்காணிப்பு ஊழியர் ஒருவர் ரயில் பாதையில் அதிபரின் உடல் கிடந்ததை கண்டு, நானு ஓயா ரயில் நிலையம் மற்றும் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் சடலம் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு விசாரணைகளின் பின்னர் வீட்டாரிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## ஒன்றிணைந்த எதிரணியை உருவாக்குவதே நோக்கம்



ரணில் அரசாங்கத்தை தோற்கடிப்பதற்கு சாத்தியமான பரந்த கூட்டணியை உருவாக்குவது அவசியமாகும் என்றும் ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட ஏனைய அனைத்து எதிர்க்கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்த தமது கட்சி தயாராக உள்ளதாக குறிப்பிட்டார்.

தற்போதைய அரசாங்கத்தை தோற்கடிக்கும் பொதுவான இலக்கை நிறைவேற்ற அனைத்து எதிர்க்கட்சிகளுக்கும் பாலம் அமைப்பதற்கு முன்னுரிமை அளிப்பதே எங்கள் நோக்கம் என்றும் எதிர்க்கட்சிகளுக்கு இடையே பொதுவான உடன்பாட்டை உருவாக்குவதே எங்களது அணுகுமுறை என்றும் குறிப்பிட்டார்.

> **“அரசாங்கத்தை தோற்கடிக்கும் பொதுவான இலக்கை நிறைவேற்ற அனைத்து எதிர்க்கட்சிகளுக்கும் பாலம் அமைப்பதே எங்கள் நோக்கம்; எதிர்க்கட்சிகளுக்கு இடையே பொதுவான உடன்பாட்டை உருவாக்குவதே எங்களது அணுகுமுறை**

அனைவரும் தங்கள் கட்சி மற்றும் தனிப்பட்ட இலட்சியங்களைப் பற்றி சிந்திப்பதை விட ஒரு பொதுவான திட்டத்தில் உறுதியாக இருக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

இதேவேளை, இந்த விடயம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார, தமது கட்சி தற்போது அழகப்பெரும தலைமையிலான குழுவுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளதாக தெரிவித்தார்.

எவ்வாறாயினும், தேசிய சுந்திர முன்னணியுடன் இணைய முடியுமா என்பது தெளிவாகத் தெரியவில்லை என்றார்.

## ரூபாயின் பெறுமதி திடீரென சரிந்தது



கடந்த வெள்ளிக்கிழமை கொள்வனவு விலை 288 ரூபாய் 08 சதமாகவும் விற்பனை விலை 301 ரூபாய் 12 சதமாகவும் பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கடந்த மே மாதம் 18ஆம் திகதியன்று கிட்டத்தட்ட 1 வருடத்துக்குப் பின்னர், டொலரின் பெறுமதி 300 ரூபாயை விட குறைவடைந்திருந்தது.

அன்றையதினத்தில் கொள்வனவு விலை 299 ரூபாய் 21 சதமாகவும் விற்பனை விலை 312 ரூபாய் 37 சதமாகவும் பதிவாகியது.

## 300 போதை மாத்திரைகளுடன் ஒருவர் சிக்கினார்

2023 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 11 ஆம் திகதி நடத்தப்பட்ட தேடுதல் நடவடிக்கையிலேயே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்படி, வடமத்திய கடற்படை கட்டளையின் இலங்கை கடற்படை கப்பல்கள் பண்டுகாபய நிறுவனம், மதுகந்த பொலிஸ் விசேட அதிரடிப்படையினருடன் இணைந்து மேற்கொண்ட இந்த விசேட நடவடிக்கையில், வவுனியா, கோவில்குளம் சந்திக்கு அருகில் சந்தேகத்திற்கிடமான நபர் ஒருவரை அவதானித்து சோதனையிட்டனர்.

அங்கு, குறித்த நபர் விற்பனைக்காக எடுத்துச் சென்ற 300 பிரேகபலின் மாத்திரைகளுடன் கைது செய்யப்பட்டார்.

இந்த நடவடிக்கையின் மூலம், கைது செய்யப்பட்ட சந்தேக நபர் வவுனியா பகுதியைச் சேர்ந்த 41 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டதுடன், சந்தேகநபர் மற்றும் 300 மாத்திரைகள் என்பன மேலதிக விசாரணைகளுக்காக வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு உள்ளது.

## ஒரே குடும்பத்தை சேர்ந்த 3 பேர் பலி

இந்த விபத்தில் ரம்புக்கன, கொத்வெல்ல பிரதேசத்தில் வசிக்கும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 40 வயதான தந்தை, 39 வயதான தாய் மற்றும் 13 வயதான மகன் ஆகியோர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இவர்கள் மூவரும் காலியில் இடம்பெற்ற இறுதிச் சடங்கில் கலந்து கொண்டு ஓட்டோவில் வீடு திரும்பிக் கொண்டிருந்த போது, கொழும்பு நோக்கி பயணித்த டிப்பருடன் மோதி விபத்துக்குள்ளானமை சிசிடிவி கமெராவில் பதிவாகியுள்ளது.

விபத்து தொடர்பில் டிப்பர் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவித்த பொலிஸார், இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## சிறுவர்கள் கூலிகளாகும் அபாயம் காணப்படுகிறது

நாட்டின் தற்போதைய சட்டத்தின்படி, 16 முதல் 18 வயதுக்குட்பட்ட சிறுவர்களை ஆபத்தில்லாத பணிகளில் மட்டுமே அமர்த்த முடியும் என்பதுடன், இது அவர்களின் வாழ்க்கை, சுகாதாரம், கல்வி அல்லது தார்மிக வளர்ச்சிக்கு ஆபத்தை ஏற்படுத்தாத வகையில் அமைய வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் அந்த சிறுவர்களை பாதுகாப்பற்ற வேலைகளில் அமர்த்துவதும், இரவு நேரங்களில் பணிக்கு அமர்த்துவதும் சட்டவிரோதமானதாகும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், பொருளாதார நெருக்கடி காரணமாக இந்த நிபந்தனைகள் மீறப்பட்டு அதிகளவான சிறுவர்கள் பணிக்கு அமர்த்தப்படும் அபாயம் இருப்பதாக அதிகார சபை தெரிவித்துள்ளது.

## வரித் திருத்தத்துக்கு எதிராக மீண்டும் பணிப்புறக்கணிப்பு

அரசாங்கம் ஒரு தீர்மானத்துக்கு வந்து அதன் திட்டத்தை ஒரு வாரத்துக்குள் அறிவிக்கத் தவறினால், ஏனைய நிபுணர்களின் ஆதரவுடன் சில நடவடிக்கைகளை எடுக்க வேண்டியிருக்கும் என்று குறிப்பிட்டார்.

அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் மற்றும் தொழில் வல்லுநர்கள் எவ்வாறு திருத்தங்களைச் செய்ய வேண்டும் என்பது குறித்து ஏற்கெனவே அதிகாரிகளுக்கு தங்கள் முன்மொழிவுகளை வழங்கியுள்ளனர் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

வரி தொடர்பான தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால் தொழிற்சங்க நடவடிக்கையை தவிர வேறு வழியில்லை என்று என்றும் அவர் குறிப்பிட்டார்.

## மாணவர்களின் நடவடிக்கை மனவேதனை அளிக்கிறது

தான் கல்வி கற்ற பாடசாலையின் தளபாடங்களையும் ஏனைய பொருட்களையும் சேதப்படுத்துவதாக இருந்தால் அவர்களின் மனநிலை எவ்வாறு இருக்கின்றது என்பதை எம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை.

க.பொ.த சாதாரண தரம் என்பது கல்வியின் நிறைவு நாள் அல்ல. அடுத்த கட்டத்தை நோக்கிய ஒரு பயணம். இவ்வாறான செயல்களை செய்துவிட்டு எவ்வாறு உயர்தரம் கற்பதற்கு மீண்டும் அந்த பாடசாலைக்கு மாணவர்கள் வருகை தருவார்கள் என்பது பெரும் கேள்விக்குறியாகவே இருக்கின்றது.

இவ்வாறு மாணவர்கள் நடந்து கொள்வதற்கு யார் காரணம்? யாருடைய கோபத்தை இவர்கள் வெளிப்படுத்துகின்றார்கள்? அண்மைய காலங்களிலேயே இவ்வாறான செயற்பாடுகள் அதிகரித்துள்ளன. அதே நேரத்தில் சில மாணவர்கள் தாங்கள் கல்வி கற்ற பாடசாலையை வணங்கிவிட்டு செல்வதையும் நாம் காணக் கூடியதாகவுள்ளது என்றும் அவர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# நச்சு மீன் உண்ட தாயாரும் உயிரிழப்பு

மாங்காடு கட்டுப் பிள்ளையார் வீதியைச் சேர்ந்த 54 வயதுடைய தில்லையம்பலம் பூசைமலர் என்பவரே சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

குறித்த பிரதேசத்தில் உள்ள வீடு ஒன்றின் உரிமையாளர் கடந்த வியாழக்கிழமை (08) மதிய உணவுக்காக அந்த பகுதியிலுள்ள கடற்கரையில் மீன்வாங்க சென்ற நிலையில் அங்கு மீன்கள் விற்பனையாகி முடிந்துள்ளன.

அந்த நிலையில் மீனவர்களின் வலையில் சிக்கிய நச்சு தன்மை கொண்ட மீனை, அங்கு மீனவர்கள் விட்டுச் சென்ற நிலையில் அதனை எடுத்து வந்து சமைத்து சாப்பிட்டுள்ளனர்.

ஒரு மணித்தியாலயத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 27 வயதுடைய தில்லையம்பலம் புஜேந்தினி, அவரது 3 வயதுடைய மகன் அஸ்வின், அவரது தாயாரான பூசைமலர், சகோதரன் 20 வயதுடைய கிறிஸ்ரின் ஆகியோர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் 27 வயதுடைய தில்லையம்பலம் புஜேந்தினி உயிரிழந்ததுடன் அவரது மகன் சகோதரன் சிகிச்சை பெற்று வெளியேறினார்.

அவரது தாயார் தொடர்ந்தும் அதிதீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் சிகிச்சை பலனின்றி ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்துள்ளதாக தெரிவித்த பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# பாடசாலைக்குச் செல்ல உதவிய பொலிஸ் பிரிவு

சுதத் எச்.எம். ஹேவா

ஹட்டன் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட டன்பார் மேற்பிரிவில் பாடசாலைக்குச் செல்லும் வயதில், பாடசாலைக்குச் செல்லாமல் இருந்த சிறுவர்கள் இருவருக்கு, ஹட்டன் பொலிஸ் நிலையத்தின் மக்கள் பிரிவு அதிகாரிகள் உதவி செய்து, அவ்விருவரையும் பாடசாலைக்கு திங்கட்கிழமை (12) அனுப்பிவைத்துள்ளனர்.

அந்தத் தோட்டத்தில் வசிக்கும் 48 வயதான எம். மரியான் என்பவரின் இரண்டு பிள்ளைகளே இவ்வாறு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

பொலிஸ் நிலையத்துக்குச் சென்றிருந்த அந்தத் தாய், தன்னுடைய 7 மற்றும் 12 வயதான மகன்கள் இருவரையும் பாடசாலைக்கு அனுப்பமுடியாத நிலையில் இருக்கின்றேன். ஆகையால் தனக்கு உதவி ஒத்தாசைகளை நல்குமாறு கோரியுள்ளார்.

அதன்பின்னர், பல்வேறு நபர்கள் மற்றும் நிறுவனங்களிடம் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக, பெற்றுக்கொள்ளப்பட்ட உதவிகளைக் கொண்டு இவ்விருவரையும் பன்மூர் பாடசாலைக்கு, பொலிஸார் அனுப்பிவைத்தனர்.

# தென்னை மரங்கள் விசமிகளால் எரித்து நாசம்

சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி, மயில்வாகன புரம் பகுதியில் தோட்டக் காணியில் நடுகை செய்யப்பட்டிருந்த நூற்றுக்கு மேற்பட்ட தென்னை மரங்கள், விசமிகளால் எரித்து நாசமாக்கப்பட்டுள்ளன.

கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட மயில்வாகனபுரம் கிராமத்தில் உள்ள தோட்டக் காணியில் நடுகை செய்யப்பட்டு, பராமரிக்கப்பட்டு வந்த நூற்றுக்கும் மேற்பட்ட தென்னை மரங்கள் விசமிகளால் தீயிட்டு கொளுத்தப்பட்டுள்ளன. இது தொடர்பாக, பகுதி கிராம அலுவலரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.



# இன்றுடன் ஓய்வு பெறும் ஆசிரிய ஆலோசகர் சஹறூன்

எம்.எஸ்.எம் ஸாகிர்



கல்முனை கல்வி வலய ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் ஆதம்வாவா சஹறூன் இன்று (13) அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெறுகின்றார்.

35 வருட கல்விச் சேவையில் ஆசிரியராக 23 வருடங்களும், ஆசிரிய ஆலோசகராக 12 வருடங்களும் அவர் சேவையாற்றியுள்ளார்.

சாய்ந்தமருதுக் கல்விக் கோட்டத்துக்கென வலயத்தால் நியமிக்கப்பட்டிருந்த ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகரான இவர், சாய்ந்தமருது - 10 ஐச் சேர்ந்த மர்ஹூம்களான உமறுலெவ்வை ஆதம்வாவா, முஹம்மது இப்றாலெவ்வை கதீஜாவீவீ தம்பதியருக்கு மகனாக 1963.06.14 ஆம் திகதி பிறந்த இவர், தனது ஆரம்பக் கல்வியை சாய்ந்தமருது அல்-ஹிலால் வித்தியாலயத்திலும், இடைநிலை மற்றும் உயர் நிலைக்கல்வியை கல்முனை ஸாஹிறா தேசிய பாடசாலையிலும் கற்றார்.

சாய்ந்தமருது அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையில் ஆசிரியையாக கடமையாற்றும் ஆதம்வாவா ஜுனைதா என்பவரின் கணவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# மாட்டுத் திருடரை மடக்கிப்பிடித்த பொதுமக்கள்

க. அகரன்

வவுனியா, சமயபுரம் கிராமத்தில் மாடுகளை திருட முயன்ற இரு நபர்களை மடக்கிப்பிடித்த பொதுமக்கள், குறித்த நபர்களை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் ஒப்படைத்தனர்.

குறித்த பகுதியில் நேற்று (12) காலை 6.00 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது: நெளுக்குளம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சமயபுரம் கிராமத்தில், கடந்த சில மாதங்களாக கால்நடைகள் திருடப்படுகின்றமை அதிகரித்துக் காணப்பட்டதுடன் கால்நடைகளை களவாடுபவர்களை பொதுமக்கள் கையும் களவுமாக பிடித்து, நெளுக்குளம் பொலிஸ் நிலையத்தில் கையளித்தபோதிலும் அப்பகுதியில் கால்நடைகள் களவாடப்படுகின்றமை தொடர்ந்த வண்ணமே இருந்தது.

இந்நிலையில், நேற்று விநாயகர் வித்தியாலய வீதியில் மாட்டைக் களவாட முயன்ற இரு நபர்களை, பொதுமக்கள் நையப்புடைத்து வாகனம் ஒன்றில் கட்டி வைத்ததுடன் அவர்களை, நெளுக்குளம் பொலிஸ் நிலைய பொலிஸாரிடம் வழங்குவதற்கு பொதுமக்கள் மறுப்பு தெரிவித்ததுடன் இருவரையும் வாகனத்தில் ஏற்றி, வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் ஒப்படைத்தனர்.

# மருதமடு அன்னையின் ஆடி மாத திருவிழா



எஸ்.றொசேரியன் லெம்பேட்

பிரசித்தி பெற்ற மருதமடு அன்னையின் ஆடி மாத திருவிழாவை முன்னிட்டு, முன் ஏற்பாடுகள் குறித்து விசேட கலந்துரையாடல் நேற்று (12) மன்னார் மாவட்டச் செயலகத்தில், அரசாங்க அதிபர் திருமதி ஏ. ஸ்ரான்லி டிமெல் தலைமையில் நடைபெற்றது. இதன் போது மடு திருத்தலத்தின் பரிபாலகர் அருட்தந்தை பெப்பி சோசை அடிகளார், அழைக்கப்பட்ட திணைக்கள தலைவர்கள், பாதுகாப்பு தரப்பினர் எனப் பலர் கலந்து கொண்டனர்.

குறித்த கலந்துரையாடல் தொடர்பாக மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை பி.கிறிஸ்து நாயகம் அடிகளார் தெரிவிக்கையில், ஆடி மாதம் இரண்டாம் திகதி இடம்பெற உள்ள மடு அன்னையின் ஆடி திருவிழாவுக்கு முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டன.

குறிப்பாக சுகாதாரம், மருத்துவம், குடிநீர் , போக்குவரத்து, பாதுகாப்பு, உணவு உள்ளிட்ட முக்கிய விடயங்கள் விரிவாக ஆராயப்பட்டுள்ளன. இம்முறை பல ஆயிரக்கணக்கான மக்கள் வருவார்கள் என எதிர்பார்க்கப்பட்டு உள்ளமையால் பல்வேறு விடயங்கள் குறித்து ஆராயப்பட்டன.

இம்மாதம் 23 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆடி மாத திருவிழா ஆரம்பமாகும்.

# மலசலக்கூடத்துக்குள் தன்னுயிரை மாய்த்த மாணவன்

ரஞ்சித் ராஜபக்ஷ

பத்து வயதான மாணவன் ஒருவன், தன்னுடைய வீட்டின் மலசலக்கூடத்துக்குள் தன்னுயிரை மாய்த்துக்கொண்ட சம்பவம் பொகவந்தலாவை பொலிஸ் பிரிவில் இடம்பெற்றுள்ளது.

**ஒல்டி தமிழ் மகா வித்தியாலயத்தில் தரம் 5இல் கல்வி பயிலும் மாணவன் வீட்டில் விளையாடிக் கொண்டிருந்த போதே, மலசலக்கூடத்துக்குள் சென்று இவ்வாறு தன்னுயிரை மாய்த்துக்கொண்டுள்ளார்**



ஒல்டி தமிழ் மகா வித்தியாலயத்தில் தரம் 5இல் கல்வி பயிலும் மாணவன் வீட்டில் விளையாடிக் கொண்டிருந்த போதே, மலசலக்கூடத்துக்குள் சென்று இவ்வாறு தன்னுயிரை மாய்த்துக்கொண்டுள்ளார்.

மரணமடைந்த மாணவனின் பூதவுடல், டிக்கோயா-கிளங்கன் வைத்தியசாலையில், பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஹட்டன் நீதவான் ஸ்தல பரிசோதனைக்குப் பின்னர், மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என்று பொகவந்தலாவை பொலிஸார் தெரிவித்தனர்.

# 11 மாணவர்களுக்கு வகுப்புத்தடை

ஷேன் செனவிரத்ன

பேராதனைப் பல்கலைக்கழக முகாமைத்துவ பீடத்தின் புதிய மாணவர் குழுவை துன்புறுத்தி, பகிடிவதைக்கு உட்படுத்தியதாகக் கூறப்படும் அப்பீடத்தின் இரண்டாம் வருட மாணவர்கள் 11 பேருக்கு தற்காலிக வகுப்புத்தடை விதிக்கப்பட்டுள்ளது என பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பிரதி உபவேந்தரும் ஊடகப் பேச்சாளருமான பேராசிரியர் டெரன்ஸ் மதுஜித் தெரிவித்தார்.

முகாமைத்துவ பீடத்துக்கு புதிதாக சேர்க்கப்பட்ட மாணவர்கள் தங்கியிருந்த விடுதிக்குச் சென்று அங்கு தங்கியிருந்த மாணவர்களை பகிடி வதைக்கு உட்படுத்தியதாக செய்யப்பட்ட முறைப்பாட்டின் பிரகாரம், 11 மாணவர்களும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு, தற்காலிகமாக வகுப்புத்தடை விதிக்கப்பட்டுள்ளதாக பேராசிரியர் மேலும் தெரிவித்தார்.



# சேருவில படுகொலையின் 37ஆவது ஆண்டு நினைவேந்தல்

சேருவில படுகொலையின் 37ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று (12) ஈச்சிலம்பற்று, பூநகர் பகுதியில் அமைக்கப்பட்ட நினைவேந்தல் மண்டபத்தில் உணவுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

வெருகல் - ஈச்சிலம்பற்று பகுதி அகதி முகாம்களில் தஞ்சமடைந்திருந்த மக்களுக்கான உலர் உணவுப்பொருட்களை 1986.06.12 அன்று சேருவில பகுதியில் இருந்து ஈச்சிலம்பற்று நோக்கி எடுத்து வரும்போது, மகிந்தபுர பகுதியில் வைத்து மூன்று அரச அதிகாரிகள் உட்பட 21பேர் ஆயுததாரிகளினால் படுகொலை செய்யப்பட்டு இருந்தார்கள்.

**ஈச்சிலம்பற்று பகுதி அகதி முகாம்களில் தஞ்சமடைந்திருந்த மக்களுக்கான உலர் உணவுப்பொருட்களை 1986.06.12 அன்று சேருவில பகுதியில் இருந்து ஈச்சிலம்பற்று நோக்கி எடுத்து வரும்போது, மகிந்தபுர பகுதியில் மூன்று அரச அதிகாரிகள் உட்பட 21 பேர் படுகொலை செய்யப்பட்டார்கள்**



# மாணவி கௌரவிப்பு

ஹஸ்பர்

திருகோணமலை மாவட்ட செயலகம், இலங்கை சமூக பாதுகாப்பு சபை ஆகியவற்றின் ஏற்பாட்டில் க.பொ.த சாதாரண தர பரீட்சையில் சித்தியடைந்த சண்முகா இந்து மகளிர் கல்லூரி மாணவி உ. அபிநயா நேற்று (12) திருகோணமலை மாவட்ட செயலகத்தில் வைத்து கௌரவிக்கப்பட்டார்.

திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் பி.எச்.என் ஜயவிக்ரம தலைமையிலும் மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ் அருள்ராஜின் ஒருங்கிணைப்பிலும் உ.அபிநயாவுக்கு மேலதிக பிரதிலாபக் கொடுப்பனவாக ரூபாய் 25,000 பெறுமதியான காசோலை வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

இந்நிகழ்வில், இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் மாவட்ட இணைப்பதிகாரி பா.சஜிக்கா, மாவட்ட செயலக உத்தியோகத்தர் எஸ். புவகிதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மழை வேண்டி குனூத் ஓதுமாறு வேண்டுகோள்

ஏ.எம் அஸ்லம்

மக்களால் தாங்கிக் கொள்ள முடியாதளவில் நீடித்துச் செல்கின்ற அதிகூடிய வெப்பம் நிறைந்த வானிலையைத் தணிப்பதற்காக, மழை பொழிய வேண்டி ஐவேளைத் தொழுகைகளிலும் குனூத் ஓதுமாறு அம்பாறை மாவட்ட ஜம்மியத்துல் உலமா சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஞாயிற்றுக்கிழமை (11) பாலமுனை ஸஹ்வா அரபுக் கல்லூரியில் மேற்படி உலமா சபையின் தலைவர் ஐ.எல். எம் ஹாஷிம் மௌலவி தலைமையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதற்கு அமைவாக, இவ்வேண்டுகோள் விடுக்கப்படுவதாக அதன் செயலாளர் ஏ.எல் நாசிர்கனி மௌலவி தெரிவித்தார்.

# இரண்டு உயிர்களைத் தின்ற மீனும் மாடுகளுக்கான அம்மை நோயும்

ஏதோவொரு வகையில் சம்பாதித்துக்கொள்ள வேண்டும் என்ற வெறியோடு, இராப்பகலாக உழைப்போரும், குறுக்கு வழியில் சம்பாதித்து திடீரென முன்னேறுவோரும், சட்டவிரோதமான வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு, பணத்தை சம்பாதித்துக்கொள்வோரும் இருக்கத்தான் செய்கின்றனர்.

இதற்கிடையே, விலைகள் குறைவடையும் போது குறைத்தும், அதிகரிக்கும் போது அதிகரித்தும், ஒரு நியாயமான முறையில், பொருட்களை விற்பனை செய்வோரும் உள்ளனர். அவ்வாறானவர்களுக்கு மத்தியில் காலாவதியான திகதியை நீட்டித்து, புதிய பொருளாகக் காண்பித்தும், கலப்படம் செய்தும் விற்பனை செய்கின்றவர்களும் உள்ளனர்.

வர்த்தகர்கள் தங்களுடைய வர்த்தகத்தை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லவேண்டுமாயின், நுகர்வோரை ஏமாற்றக்கூடாது. 'மழைக்கு முளைக்கும் காளான்களைப் போல', வர்த்தகத்தில் ஈடுபடுவோர், நுகர்வோரை இலகுவாக ஏமாற்றிவிடுவர். தாங்கள் ஏமாற்றப்பட்டுவிட்டோம் என்பதை புரிந்துகொண்ட நுகர்வோர், ஏமாற்றப்பட்ட கடையின் பக்கமே தலையைவைத்து படுக்கமாட்டார்.

காலாவதியான பொருட்களை உட்கொண்ட பலருக்கு ஒவ்வாமை ஏற்பட்டு பாதிக்கப்படுகின்றனர். சிலர் மரணித்தும் உள்ளனர். மட்டக்களப்பு, மாங்காட்டில் நஞ்சு மீனை சாப்பிட்ட மகளும், தாயும் உயிரழந்துள்ளனர்; மற்றுமொருவர் இன்னும் சிகிச்சைப்பெற்று வருகின்றார்.

இதில், மீனவர்கள் மீது குற்றஞ்சாட்டமுடியாது. ஏனெனில், மீன் வர்த்தகத்தை முடித்துக்கொண்டு தங்களால் விட்டுச் செல்லப்பட்ட நஞ்சு மீனை இந்தக் குடும்பத்தினர் எடுத்துவந்தே சமைத்து உண்டுள்ளனர்.

தற்போதைய சூழ்நிலையில் பல குடும்பங்களுக்கு சாப்பாட்டுக்கு பெரும் கஷ்டம் ஏற்பட்டுள்ளது. இலவசமாகக் கிடைக்கும் உணவுகளையும் பொருட்களையும் பலரும் விரும்புகின்றனர். அதற்காக, கழித்து ஒதுக்கப்பட்ட, குப்பைகளில் வீசப்பட்ட பொருட்களை, பழுதடைந்த பகுதியை வெட்டி அகற்றிவிட்டு குவியலாக விற்கும் பொருட்களை கொண்டுவந்து சமைப்பதை விட்டுவிடவும்.

ஒருவேளை பட்டினியில் கிடந்து, பல ஆண்டுகளுக்கும் உயிர்வாழலாம். ஆனால், காலாவதியான உடலுக்கு ஒவ்வாத சமையல் பொருட்களை சமைத்து உண்டு, நோய்களைத் தொற்றிக்கொண்டு சதா காலமும் நோயாளியாக மாறிவிடக்கூடாது.

எமது நாட்டைப் பொறுத்தவரையில், மாடுகளுக்கு ஒரு வகையான அம்மை நோய் பரவியுள்ளது. வடமேல் மாகாணத்தில் வளர்க்கப்படும் மாடுகளுக்கு இனங்காணப்பட்ட அந்த நோய், கிழக்கு, மத்திய ஆகிய மாகாணங்களில் வளர்க்கப்படும் மாடுகளுக்கும் பரவி, மேல் மாகாணத்துக்கும் பரவியுள்ளது.

இயற்கையாக மரணிக்கும், இறைச்சிக்கு எடுத்துக்கொள்ளப்படும் விலங்குகளை வெட்டி, இறைச்சிக் கடைகளுக்கு விற்பனை செய்யப்படும் சம்பவங்கள் தொடர்பிலான செய்திகளை பலரும் கேள்விப்பட்டிருக்கலாம். மாட்டிறைச்சியிலும் அதே நடைமுறையை சிலர் பின்பற்றலாம். ஆகையால், மாட்டிறைச்சியை உணவாக எடுத்துக்கொள்வோர் விழிப்பாக இருக்கவேண்டும்.

மேலே குறிப்பிட்ட மாகாணங்களுக்கு இடையில், மாட்டிறைச்சியை கொண்டு செல்வதற்கு தடை விதிக்கப்பட்டிருந்தாலும், மாகாணங்களுக்கு இடையில் கடத்துவதற்கும் முயலக்கூடும் என்பதை நினைவில் கொள்வது அவசியமாகும்.

நாம், ஏற்கெனவே வலியுறுத்தியதைப் போல், இந்த அம்மை நோயை குணப்படுத்துவதற்கான அதிரடி நடவடிக்கையை விடயதானத்துக்குப் பொறுப்பானவர்கள் எடுக்கவேண்டும். இல்லையேல், பண்ணையாளர்களுக்கு பெரும் பாதிப்பு ஏற்படும்.




தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

ஒவ்வொருவருடைய வாழ்க்கை முறையும் அவருக்கான தனித்துவமானதும் உரிமையானதுமாகும். ஆனால், அவர்களுடைய தனித்துவத்தில் உண்மை, நேர்மை, நீதி ஆகியவை இணைந்திருக்க வேண்டும்.

மனம்போன போக்கின்படி எவரும் வாழமுடியாது. மனமும் செயலும் சுத்தமாக அமையவேண்டும். தனித்துவம் என்பதே எடுத்துக்காட்டாக வாழ்வதாகும்.

ஆனால், மக்கள் இன்னமும் உண்மைகளை உணராமல், தராதரம் அற்ற அரசியல்வாதிகளை ஆதரித்து, அவஸ்தைப்படுகின்றார்கள். இது மோசமான அவலம். நீதியான உலகம் உருவாக, ஒவ்வொரு தனி மனிதனும் நேர்மையான மனிதனாக வாழவேண்டும். பிறரின் தவறுகளை ஆராய்பவர்கள், தங்கள் வாழ்க்கையை ஒழுக்கமானதாக மாற்றியமைத்துக் கொள்ள வேண்டும்.

எமக்கான வாழ்க்கை ஒரேயொரு தடவைதான் வழங்கப்படுகின்றது. எனவே, இந்தச் சந்தர்ப்பத்தை நல்லபடி பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

வாழ்க்கையில் சோதனை, துன்பம், பிரச்சினை எனபன வரலாம். ஆனால், மனஉறுதியுடன் வாழ்வதையே உலகம் எதிர்பார்க்கின்றது. அழகான உலகை ஆராதியுங்கள். எங்களை நம்பியே புவனம் வாழ்கின்றது. உண்மை துணை செய்யும்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

# எந்தத் தேர்தல் இப்போது சாத்தியம்?

**மொஹமட் பாதுஷா**

தேர்தல்களைப் பற்றிப் பேசிப்பேசியே, இலங்கை மக்களின் பெரும்பகுதிக் காலம் கழிந்து கொண்டிருக்கின்றது. தேர்தல் நடைபெறுமா, ஒத்திவைக்கப்படுமா, எந்தத் தேர்தல் முதலில் நடக்கும், அதில் யார் வெற்றி பெறுவார் என்று ஊகிப்பதில் அதிக நேரத்தை செலவிட்டுக் கொண்டிருக்கின்றோம்.

தேர்தல் என்பது மக்களது ஜனநாயக உரிமை. அது உரிய காலத்தில், நேர்மையான முறையில் நடத்தப்பட வேண்டும். ஆயினும், கடந்த காலங்களில் நடைபெற்ற தேர்தல்களின் ஊடாக, மக்களுக்கு என்ன பலன் கிடைத்தது? குறைந்தபட்சம் ஜனநாயகம் நிலைநாட்டப்பட்டதா என்பது மிகப் பெரிய கேள்விதான்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு, தேர்தல் பிரசாரங்கள் ஆரம்பிக்கப்பட்ட பிற்பாடு, தேர்தலானது கால வரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டு இருக்கின்றது.

ஒரு தேர்தலை நடத்துவதற்கு ஏதுவான பொருளாதார நிலையோ, மக்களின் மனநிலையோ இல்லை என்பது ஏற்கெனவே நன்றாகத் தெரிந்திருந்த சூழ்நிலையில், "இதோ தேர்தலை நடத்தப் போகின்றோம்" என்று ஒரு 'படம்' காட்டப்பட்டு, கடைசியில் அந்தக் காட்சி 'ஒப்'செய்யப்பட்டுள்ளது.

நடக்கின்ற சம்பவங்களை தொகுத்து நோக்கினால், உள்ளூராட்சி தேர்தல் மிகக் கிட்டிய காலத்தில் நடப்பதற்கான நிகழ்தகவுகள் மிகக் குறைவாகவே தெரிகின்றன. இந்தப் பின்னணியில், இப்போது ஜனாதிபதி தேர்தல் பற்றியும் மாகாண சபைகளுக்கான தேர்தல் பற்றியும் அரசியல் அரங்கில் ஊடாட்டங்கள் வெளிப்படத் தொடங்கியுள்ளன.

அடுத்த வருட முற்பகுதியில் ஜனாதிபதி தேர்தலை நடத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மந்திர ஆலோசனைகளை மேற்கொண்டு வருவதாக செய்திகள் வெளியாகியுள்ளன. மறுபுறத்தில், இந்தியாவின் அழுத்தம் உள்ளிட்ட காரணங்களால், மாகாண சபைத் தேர்தல் நடைபெறலாம் என்ற ஊகங்கள் வெளியாகி இருக்கின்றன.

உள்ளூராட்சித் தேர்தலே ஒத்திவைக்கப்பட்டுள்ள தருணத்தில், திடுதிடுப்பென இன்னுமொரு தேர்தலுக்கு அகலக் கால் விரித்துப் பாய்வது அவ்வளவு சுலபமான காரியமல்ல.

ஆனால், இப்படியே தேர்தல்கள் எதுவுமின்றி அரசாங்கத்தை நீண்டகாலத்துக்கு இழுத்துச் செல்ல முடியாது என்ற அடிப்படையில், அடுத்ததாக ஒரு தேர்தல் நடக்கும் என்றால் அது எந்தத் தேர்தலாக இருக்கும் என்பதே இந்தக் கருத்தாடலின் உள்ளர்த்தம் எனலாம்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை எடுத்துக் கொண்டால், இதற்கு முன்னர் பலமுறை பிரதமராக இருந்த போதும் ஜனாதிபதியாவதற்கான மக்கள் ஆணை கிடைத்திருக்கவில்லை. கோட்டாபய ராஜபக்ஷ அதிகாரத்தில் இருந்து விரட்டப்பட்ட பிறகு, ரணில் விக்கிரமசிங்கவை காலம், அக்கதிரையில் அமர்த்தி அழகு பார்த்துக் கொண்டிருக்கின்றது.

இப்போது, நாட்டின் வீழ்ச்சிநிலை மாறி வருகின்றது. பல குறிகாட்டிகளில் நிரந்தரமாகவோ, தற்காலிகமாகவோ முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளதான தோற்றப்பாடு தெரிகின்றது. ரணில்தான் இந்த மீட்சிக்கு காரணமானவர் என்பதை, அரசியல்வாதிகளும் மக்களும் பொதுவெளியிலேயே பேசுகின்றனர்.

இருப்பினும், மக்களின் மூலம் நேரடியாக தெரிவு செய்யப்படாத ஜனாதிபதி என்றும், மொட்டுவின் முட்டின் துணையோடு நிற்பவர் என்றும் அவர் மீதான விமர்சனங்கள் அடிக்கடி முன்வைக்கப்படுகின்றன.

இந்தப் பின்னணியிலேயே, அவர் ஒரு ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்கான சாத்திய வாய்ப்புகள் குறித்து ஆராய்வதாக தெரிகின்றது. இப்போது, தனக்கு கிடைத்திருக்கின்ற மக்கள் ஆதரவை, வேறு ஒரு தேர்தலை நடத்தி குழப்பி விடாமல், நேரடியாகவே ஜனாதிபதி தேர்தல் என்ற கூடைக்குள் கொட்டிக் கொள்ளும் ஓர் எதிர்பார்ப்பின் வெளிப்பாடுதான் இது.

இந்தப் பதவிக்காலத்தோடு அவர் ஜனாதிபதி கதிரையில் இருந்து இறங்கி விடுவார். எனவே, அதனை வைத்து மக்கள் ஆணையைப் பெறுவதற்காக இன்னுமொரு தடவை முயன்று பார்க்க நினைப்பது இயல்பானது.

ஏனெனில், அவருக்கு இழப்பதற்கு ஒன்றுமில்லை. ஜனாதிபதி பதவிகூட அவருக்கு அடித்த அதிர்ஷ்டம்தான். இப்போது கிடைத்தால் இலாபம்; கிடைக்காவிட்டால் எந்த நட்டமும் வந்து விடப் போவதில்லை என்ற நிலையில்தான் ரணில் விக்கிரமசிங்க இருக்கின்றார் எனலாம்.

அது வெற்றியளித்தால், அவருக்கு வரலாற்று வெற்றி கிடைப்பது மட்டுமன்றி, அதன்மூலம் ஐக்கிய தேசிய கட்சியை மீளக் கட்டியெழுப்பவும் வாய்ப்பும் கிடைக்கும்.

இது இவ்வாறிருக்க, மாகாண சபைத் தேர்தல் பற்றிய கதைகளும் மீள எழுந்திருக்கின்றன. பல அரசியல்வாதிகள் இதுபற்றி கருத்துகளை முன்வைத்துள்ளனர். குறிப்பாக, இந்தியாவின் அழுத்தத்தின் காரணமாக மிகக் கிட்டிய காலத்தில் மாகாண சபைத் தேர்தல் நடக்கலாம் என பசில் ராஜபக்ஷ கூறியுள்ளதாக செய்தியொன்று கூறுகின்றது.

மாகாண சபைகளுக்கான தேர்தல்களை நடத்துமாறு, பல தரப்பினர் அழுத்தம் கொடுத்து வருகின்ற சமகாலத்தில், மாகாண சபை முறைமையையே முற்றாக நீக்க வேண்டும் என்று இன்னொரு தரப்பு கூறி வருகின்றது. அரசாங்கத்துக்கும் இந்தியாவுக்கும் இதற்குப் பின்னால் பல சாதக, பாதக விளைவுகள் உள்ளன.

இலங்கையில் உள்ள 09 மாகாண சபைகளின் ஆயுட்காலமும் முடிவடைந்து பல வருடங்கள் ஆகிவிட்டன. மாகாண சபை என்ற அரச கட்டமைப்பு இயங்குகின்றது. ஆனால், மாகாண அரசாங்கத்தில் முதலமைச்சர் இல்லை. எல்லா வேலைகளையும் ஆளுநர்களைக் கொண்டு மத்திய அரசாங்கம் செய்து கொண்டிருக்கின்றது.

மாகாண சபை தேர்தலை நடத்துமாறும் 13ஆவது திருத்தத்தை அமல்படுத்துமாறும் இந்தியா தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வருகின்றது. இதேகோரிக்கையை தமிழ்த் தரப்பு முன்வைத்து வருகின்றது. குறிப்பாக காணி, பொலிஸ் அதிகாரங்களை வலியுறுத்துகின்றது.

முஸ்லிம் தரப்புக்கும் இது விடயத்தில் ஒரு தெளிவான நிலைப்பாடு இருக்க வேண்டும். ஆனால், மாகாண அரசியலை நம்பி இருக்கின்றவர்கள், முதலமைச்சர் மற்றும் மாகாண அமைச்சர் கனவுடன் இருப்பவர்கள் தேர்தல் நடக்க வேண்டும் என்ற எண்ணத்திலும், ஏனைய முஸ்லிம் எம்.பிக்கள் தேர்தல் நடக்காவிட்டாலும் நல்லது என்ற நிலைப்பாட்டிலும் இருப்பதாகவே தெரிகின்றது.

அதாவது, மாகாண சபை மற்றும் அதனூடான அதிகாரங்கள் என்ற விடயத்தை வழக்கம் போல தமது சுயஅரசியல் என்ற புள்ளியில் நின்று கொண்டுதான் முஸ்லிம் அரசியல்வாதிகள் நோக்குகின்றனர். அதற்கப்பால் சமூகம் சார்ந்த தெளிவான நிலைப்பாடுகள் எதுவும் கிடையாது.

உண்மையில், மாகாண சபைக்கு தேர்தல் ஒன்றை நடத்துவது அரசாங்கத்துக்கப் பெரிய விடயமே இல்லை. ஆனால், தேர்தலை நடத்தினால் அமைகின்ற புதிய மாகாண ஆட்சியில் 13ஆவது திருத்தத்தை அமல்படுத்த வேண்டும் என்று இந்தியா ஒற்றைக்காலில் நிற்கும்.

குறிப்பாக காணி, பொலிஸ் அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு வழங்க வேண்டி ஏற்படும். இன்னும் சொல்லப் போனால், நாட்டுக்குள் இன்னுமொரு சிறிய பிரகடனப்படுத்தப்படாத தனி இராச்சியம்போல மாகாணங்கள் அதிலும் குறிப்பாக வடக்கும், கிழக்கும் செயற்படலாம் என்ற அச்சம் உள்ளது.

மாகாண சபை முறைமை அறிமுகப்படுத்தப்பட்ட காலத்தில் இருந்தே கணிசமான சிங்கள அரசியல்வாதிகள் இதற்கு எதிராக பல போராட்டங்களை முன்னெடுத்தனர். மாகாண சபைகள் திருப்திப்படுமளவுக்கு வினைத்திறனாக செயற்படத் தவறிய பின்புலச் சூழலில், மாகாண சபை முறைமை ஒரு 'வெள்ளை யானை' என்ற கருத்து தென்னிலங்கையில் வலுப் பெற்றுள்ளது.

இந்தியாவும் தமிழ்த்தரப்பும், ஏன் ஒருசில பெருந்தேசிய அரசியல்வாதிகளும் மாகாண சபை தேர்தல் அவசரமாக நடத்தப்பட வேண்டும் என்று கோரி வருகின்ற போதிலும், மறுபுறத்தில் மாகாண சபை முறைமையை முற்றாகவே ஒழிக்க வேண்டும் என்ற கருத்தை கணிசமான சிங்கள அரசியல் தரப்புகள் முன்வைத்து வருகின்றன.

எனவே, மாகாண சபை தேர்தலை நடத்துவது என்ற முடிவை ஜனாதிபதியோ அரசாங்கமோ எடுத்தால், 13ஆவது திருத்தத்தை அமல்படுத்துவதா? எந்தளவுக்கு அமலாக்கம் செய்வது என்ற முடிவை அதற்கு முன்னரே எடுத்திருக்க வேண்டும். அது அவ்வளவு இலகுவான காரியமல்ல. அதனாலேயே தேர்தல் இழுத்தடிக்கப்படுகின்றது எனலாம்.

ஒருவேளை ஜனாதிபதி தேர்தலில் அல்லது அதற்கு அடுத்ததாக நடைபெறவுள்ள தேர்தலில் இந்தியாவின் ஆதரவைப் பெற்றுக் கொள்ளும் நோக்கமிருந்தால், அதற்காக தேர்தலை நடத்தும் முனைப்புகளைச் செய்யலாம் என்று கருதினாலும், இலங்கையில் உறைநிலையில் இருக்கின்ற களநிலைமைகள் அதற்குச் சாதகமானவையாக தெரியவில்லை.

எது எவ்வாறிருப்பினும், அரசாங்கம் இந்தியாவை சமாளிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார்கள் என்பது வெள்ளிடைமலை. அதிகாரப் பகிர்வு, 13ஆவது திருத்தத்துக்கான தனது விருப்பத்தை ஜனாதிபதி ரணில் பகிரங்கமாகவே கூறி வருகின்றார் என்பது இதில் முக்கியமானது.

அதுமட்டுமன்றி, வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு இரு தமிழர்கள் ஆளுநர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். அதுவும் குறிப்பாக, மலையகத்தைச் சேர்ந்த, இந்தியாவின் பின்புலமும் ஆதரவும் உள்ள செந்தில் தொண்டமான் கிழக்கு மாகாணத்துக்கு ஆளுநராக நியமிக்கப்பட்டமை இங்கு முக்கியமான ஒரு நகர்வாகும்.

உள்ளூராட்சி தேர்தலையே நடத்த முடியாத ஒரு சூழ்நிலையில், வெளி அழுத்தங்களுக்காக, தடை தாண்டிப் பாய்ந்து மாகாண சபை தேர்தல் ஒன்றை அரசாங்கம் மிகக் கிட்டிய காலத்தில் நடத்துவதற்கான நிகழ்தகவுகள் மிகக் குறைவாகவே தெரிகின்றன.

ஆனால், தேர்தலை நடத்தும் வரை அல்லது மாகாண சபை முறைமையையோ 13 இனையோ பெருந்தேசியத்திற்கு விருப்பமான விதத்தில் மாற்றியமைக்கும் வரைக்கும், அழுத்தம் கொடுப்போரை சமாளிக்கும் நகர்வுகள் தொடருமென எதிர்பார்க்கலாம்.

## கடிதங்கள்

### பிரவுன்சிக், எமலின் தோட்ட வீதியின் குன்றும் குழியுமாகிய விதி

மஸ்கெலியா, பிரவுன்சிக் தோட்டத்தில் எமலின் பிரிவுக்கு செல்வதற்கு, சாமிமலை ஓயா ஊடாக 600 இலட்சம் ரூபாய் செலவில் பாலமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தாலும் அதன்மூலம் மக்களுக்கு உரிய பயன் கிட்டவில்லை என விசனம் வெளியிடப்பட்டுள்ளது. அப்பகுதியில் உள்ள வீதி புனரமைக்கபடாமல் உள்ளதாலேயே பாலத்தால் பயன் இல்லை என சுட்டிக்காட்டப்படுகின்றது.

மஸ்கெலியா - சாமிமலை பிரதான வீதிக்கு வருவதற்கான பிரவுன்சிக், எமலின் தோட்ட வீதி கடுமையாக சேதமடைந்துள்ளது. இதைப் புனரமைப்பதற்கு பல வருடங்களாகியும் இன்னும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. வீதியில் நடந்துசெல்வதற்கு கூட முடியாத வகையில் குன்றும். குழியுமாக காணப்படுகின்றது.

சுமார் இரண்டு கிலோ மீற்றர் தூரத்துக்கு ஓட்டோவில் செல்வதாக இருந்தாலும்கூட, ஆயிரம் ரூபாய் வரையில் அறிவிப்படுகின்றது என மக்கள் தெரிவிக்கின்றனர். வீதி புனரமைக்கப்படாததால் மாணவர்கள், அரச அதிகாரிகள் என பலரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வீதியை புனரமைப்பதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்றிருந்தாலும் அரசியல் அழுத்தம் உள்ளிட்ட காரணங்களால் நிறுத்தப்பட்டுள்ளதாகவும், வீதியை விரைவில் புனரமைத்து தருமாறும் மக்கள் கோருகின்றனர்.

– எஸ். கணேசன்



# திருமணம் குறித்து மனம் திறந்த அஞ்சலி



ராம் இயக்கிய 'கற்றது தமிழ்' படம் மூலம் கதாநாயகியாக அறிமுகமானவர் அஞ்சலி. அதன்பின்னர் 'அங்காடித்தெரு', 'எங்கேயும் எப்போதும்', 'கலகலப்பு', 'மங்காத்தா' படங்களில் அஞ்சலியின் நடிப்பு பெரிதும் பேசப்பட்டது.

மேலும் 'ரெட்ட சுழி', 'தூங்காநகரம்', 'அரவான்', 'சேட்டை', 'சகலகலா வல்லவன்', 'மாப்ள சிங்கம்', 'இறைவி', 'நாடோடிகள் 2' உள்ளிட்ட படங்களிலும் நடித்துள்ளார். தெலுங்கு, மலையாள, கன்னட மொழி படங்களிலும் நடித்துள்ள அஞ்சலி இணையத்தொடரில் அளவுக்கு மீறிய கவர்ச்சியாக நடித்து திடுக்கிட வைத்தார். தொடர்ந்து 'ஜான்ஸி', 'பால்' போன்ற தொடர்கள் இவருக்கு நல்ல பெயரை பெற்றுத்தந்தன.

இந்நிலையில், நடிகை அஞ்சலி அண்மையில் கொடுத்த ஒரு பேட்டியில் கூறியிருப்பதாவது, "பெண்களை மதிக்கத்தெரிந்த ஒருவரைத்தான் நான் திருமணம் செய்து கொள்வேன். அவர் திருமணம் முடிந்த பிறகும் என்னை மரியாதையாக நடத்தும் நபராக இருக்க வேண்டும். இதற்குப் பிறகுதான் அன்பு, காதல் எல்லாமும். அப்படி ஒரு பையன் கிடைக்கட்டும்" என்று கூறியிருக்கிறார்.



## 'கங்குவா' சர்ப்ரைஸ்

சூர்யா நடித்து வரும் 'கங்குவா' என்ற படத்தின் அடுத்த கட்ட படப்பிடிப்பு வரும் 20ஆம் திகதி தொடங்க இருப்பதாகவும் அதில் ஒரு பாடல் காட்சி படமாக்க இருப்பதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன.

இந்தப் பாடல் காட்சியை 8 நாள்கள் படமாக்க படக்குழுவினர் திட்டமிட்டுள்ளனர். இதனை அடுத்து படக்குழுவினர் கொடைக்கானலுக்கு செல்ல இருப்பதாகவும் அங்கு பிளாஷ்பேக் சரித்திர காட்சிகளின் படப்பிடிப்பு நடத்த திட்டமிடப்பட்டு இருப்பதாகவும் கூறப்படுகிறது.

மேலும் இம்மாத இறுதியில் அல்லது அடுத்த மாதம் சூர்யாவின் பிறந்த நாளின் போது ப்ரோமோ அல்லது கிளிம்ப்ஸ் வீடியோ வெளியிட வாய்ப்பு இருப்பதாக கூறப்படுவதால் சூர்யா ரசிகர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

10க்கும் மேற்பட்ட கெட்டப்புகளில் நடித்து வரும் சூர்யா ஜோடியாக திஷா பதானி நடித்து வருகிறார். வெற்றி பழனிச்சாமி ஒளிப்பதிவில் நிஷாத் யூசுப் படத்தொகுப்பில் உருவாகி வரும் இந்தப் படத்திற்கு தேவி ஸ்ரீ பிரசாத் இசையமைத்து வருகிறார்.

சிறுத்தை சிவா இயக்கத்தில் ஸ்டுடியோ கிரீன் நிறுவனத்தின் தயாரிப்பில் உருவாகி வரும் இந்தப் படம் 3டி தொழில்நுட்பத்தில் வெளியாகவுள்ளது.



## இணையத்தை கலக்கும் 'பொம்மை'

இயக்குநர் ராதா மோகன் இயக்கத்தில் மிகுந்த எதிர்பார்ப்புகளுடன் உருவாகியுள்ள படம் 'பொம்மை'. எஸ்.ஜே.சூர்யா கதாநாயகனாக நடித்திருக்கும் இப்படத்தில் அவருக்கு ஜோடியாக பிரியா பவானி சங்கர் நடித்துள்ளார்.


யுவன் சங்கர் ராஜா இசையமைத்திருக்கும் இப்படத்தின் பாடல்கள் மற்றும் டிரைலர்கள் வெளியாகி கவனம் பெற்றன. இந்நிலையில், 'பொம்மை' படத்தின் ஸ்னீக் பீக் வீடியோவை படக்குழு வெளியிட்டுள்ளது.

இந்த வீடியோ தற்போது வைரலாகி வருகிறது. இப்படம் வருகிற ஜூன் 16ஆம் திகதி திரையரங்குகளில் வெளியாகவுள்ளது குறிப்பிடத்தக்கது.



## இரத்தம் தெறிக்கும் 'தலைநகரம் 2'

சுந்தர் சி நடித்த 'தலைநகரம்' திரைப்படம் 2006 ஆம் ஆண்டு வெளியாகி மிகப்பெரிய வெற்றி பெற்ற நிலையில் 17 ஆண்டுகள் கழித்து தற்போது இந்தப் படத்தின் இரண்டாம் பாகத்தின் படப்பிடிப்பு முடிவடைந்து விரைவில் வெளியாக உள்ளது.



இந்த நிலையில் இந்த் படத்தின் டிரைலர் தற்போது வெளியாகி இணையதளங்களில் வைரல் ஆகி வருகிறது. முதல் பாகத்தில் ரைட்டு என்ற பாத்திரத்தில் நடித்திருந்த சுந்தர் சி அதே பாத்திரத்தில் மீண்டும் மிரட்டியுள்ளார்.

டிரைலரில் அதிரடி ஆக்ஷன் காட்சிகள், இரத்தம், கொலை போன்ற காட்சிகள் இடம்பெற்றுள்ளது.

'தலைநகரம்' படத்தின் முதல் பாகத்தை சிராஜ் இயக்கிய நிலையில் 'தலைநகரம் 2' படத்தை துரை இயக்கி உள்ளார்.

இவர் ஏற்கெனவே 'முகவரி', 'தொட்டி ஜெயா', 'நேபாளி', 'இருட்டு' போன்ற படங்களை இயக்கியவர் என்பது குறிப்பிடத்தக்கது.



## அஜித்தை போலவே மிரட்டும் நடிகை

பிரபல மலையாள நடிகையான நடிகை மஞ்சு வாரியர் ,வெற்றிமாறன் இயக்கத்தில் நடிகர் தனுஷ் நடிப்பில் வெளியான 'அசுரன்' திரைப்படத்தில் தனது அற்புதமான நடிப்பின் மூலம் தமிழ் ரசிகர்களிடையே பிரபலமானார்.

தொடர்ந்து நடிகர் அஜித்துடன் இணைந்து 'துணிவு' திரைப்படத்திலும் நடித்திருந்தார்.

இதன்போது, துணிவு திரைப்படத்திற்காக நடிகர் அஜித் மேற்கொண்ட லடாக் பைக் சுற்றுலாவில் நடிகை மஞ்சு வாரியர் கலந்துகொண்டார்.

அப்போது பைக் பயணத்தின் மீது நடிகை மஞ்சு வாரியருக்கு தீராத ஆர்வம் ஏற்பட்டிருக்கிறது. இதையடுத்து அவர் சினிமா படப்பிடிப்புக்கு மத்தியிலும் அவ்வப்போது பைக் சுற்றுலா மேற்கொண்டு வருகிறார்.

## 'ஒன்றிணைந்த ஆரம்பகல்வி'







மட்டக்களப்பு தேசிய கல்வியல் கல்லூரியின் விரிவுரையாளரும் நூலாசிரியருமான இராசேந்திரம் வேல்சிவத்தால் எழுதப்பட்ட 'ஒன்றிணைந்த ஆரம்பகல்வி' எனும் நூல் வெளியீடு, மட்டக்களப்பு தேசிய கல்வியல் கல்லூரியில் ஞாயிற்றுக்கிழமை (11) கல்லூரியின் பீடாதிபதி த. கணேசரெத்தினம் தலைமையில், பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் முதன்மை அதிதிகளாக கிழக்கு பல்கலைக்கழகத்தின் கல்வி, பிள்ளை நலத்துறை முன்னாள் தலைவர் பேராசிரியர் செல்லையா அருள்மொழி, இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் க. ஞானரெத்தினம், அட்டாளைச்சேனை கல்வியியல் கல்லூரியின் பீடாதிபதி கி. புண்ணியமூர்த்தி ஆகியோரும் கௌரவ அதிதியாக முன்னாள் கிழக்கு மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் சி. மனோகரன் உட்பட கல்வியலாளர்கள், மதத்தலைவர்கள் கலந்துகொண்டார்கள்.

க. விஜயரெத்தினம்




## திருகோணமலை மாவட்ட வர்த்தக சபை

திருகோணமலை மாவட்ட வர்த்தக சபையின் நிர்வாக சபை உறுப்பினர்களின் ஒன்றுகூடல் ஞாயிற்றுக்கிழமை (11) திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில், சபையின் தலைவர் ராஜாராம் மோகன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில், திருகோணமலை மாவட்ட வர்த்தக சபையின் செயலாளர் மார்ட்டின் ஜீ. ஜெயகாந்த், பொருளாளர் எஸ். காந்தவேல் பத்மநாதன் உள்ளிட்ட உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

ஹஸ்பர்





## சிரமதானம்

மன்னார், நானாட்டான் ஓட்டோ சங்க உறுப்பினரால், நானாட்டான் பிரதேச வைத்தியசாலையை துப்புரவு செய்து, சுற்றுமதில்களுக்கு வர்ணம் பூசி, அழகுபடுத்தும் சிரமதானப் பணி, சனிக்கிழமை (10), ஞாயிற்றுக்கிழமை (11) ஆகிய இரண்டு தினங்களும் முன்னெடுக்கப்பட்டன. நானாட்டான் பகுதி வர்த்தகர்களின் உதவியுடன், குறித்த சமூகப் பணி முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. .

எஸ். றொசேரியன் லெம்பேட்





## கதிர்காம காட்டுவழிப்பாதை திறப்பு

கதிர்காம பாதயாத்திரைக்கான காட்டு வழிப்பாதை திறப்பு நேற்று (12) சம்பிரதாயபூர்வமாக இடம்பெற்றது. நிகழ்வில், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், அம்பாரை மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எம் டக்ளஸ், அம்பாரை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வி. ஜெகதீசன், லாகுகல பிரதேச செயலாளர் நவனீதராஜா, ஆலய வண்ணக்கர் சுதுநிலமே திசாநாயக்க, அம்பாரை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ஜெயராஜி, உட்பட பொதுமக்கள் கலந்து கொண்டனர். விசேட பூஜை வழிபாடுகளை ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ க.கு சீதாராம குருக்கள் நடத்தி வைத்ததன் பின்னர், சம்பிரதாயபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

வி. சுகிர்தகுமார்





## கௌரவிப்பும் நூல்வெளியீடும்

கிழக்கு மாகாண பிரதி பிரதம செயலாளர் (நிர்வாகம்) தேசமாண்ய ஆதம்பாவா மன்சூரின் 39 வருட கால அரச சேவையை பாராட்டி கௌரவிக்கும் விழாவும், 'மன்சூர் எனும் நிர்வாக ஆளுமை' நூல் வெளியீடும் ஞாயிற்றுக்கிழமை (11) சம்மாந்துறை அப்துல் மஜீட் மண்டபத்தில், நடைபெற்றது. சம்மாந்துறை சாதனையாளர்களை வாழ்த்தும் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் ஒன்றியத்தின் தலைவரும், நிர்வாக கிராம அலுவலருமான எம்.எல் தாஸீம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவுக்கு, மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி அல்ஹாபிழ் என்.எம் அப்துல்லாஹ், இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக கலை, கலாசார பீடாதிபதி அரசியல்துறை பேராசிரியர் எம்.எம் பாஸில், கிழக்கு மாகாண பேரவைச் செயலாளர் எம்.எம் நஸீர், கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளர் எம். கோபாலரத்னம், கிழக்கு மாகாண பிரதி பிரதம செயலாளர் (ஆளணி) திருமதி ஆர். யூ.ஏ ஜலீல், இராஜாங்க அமைச்சின் முன்னாள் செயலாளரும் எல்லை நிர்ணய குழு உறுப்பினருமான எம்.ஐ.எம் அமீர், வவுனியா மாவட்ட முன்னாள் அரசாங்க அதிபர் ஐ.எம் ஹனீபா, இலங்கை பொதுச்சேவை ஆணைக்குழு முன்னாள் உறுப்பினரும் அமைச்சின் மேலதிக செயலாளருமான ஏ.எல்.எம் சலீம், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் ஓய்வுபெற்ற செயலாளர் ஏ.எச்.எம் அன்ஸார், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் டொக்டர் எம்.பீ.எம் வாஜித், கிழக்கு மாகாண சபை உறுப்பினரும், சம்மாந்துறை பிரதேச சபை முன்னாள் தவிசாளருமான ஐ.எல்.எம். மாஹிர், உட்பட பிரதேச செயலாளர்கள், மாகாண திணைக்களங்களின் பணிப்பாளர்கள் உள்ளிட்ட பல உயரதிகாரிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

நூருல் ஹுதா உமர்

## டொக்டர் அருமைநாதன் சதீஸ்குமாரின் 'திருகோணமலைப் பெரியார்கள்'





டொக்டர் அருமைநாதன் சதீஸ்குமாரின் 'திருகோணமலைப் பெரியார்கள்' நூல், சனிக்கிழமை (10) திருகோணமலை அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய திருமண மண்டபத்தில் வெளியிடப்பட்டது. குச்சவெளி பிரதேச செயலாளர் கு. குணநாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், ஆசியுரையை அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய ஆதீன கர்த்தா வேதாகமமாணி சோ. இரவிச்சந்திரக்குருக்கள் வழங்கினார்.

வடமலை ராஜ்குமார்



தமிழ் அரசியலாளர்களுக்கு

# பயம்காட்டும் தென்னிலங்கை

**நவரத்தினம் கபிலநாத்**

ஓர் இனத்தின் எதிர்பார்ப்புகள், அதன் இருப்பு சார்ந்த சுதந்திரமான வாழ்வியலை நோக்கியதாக அமைந்திருக்கும். எனவே, இவ்வாறான வாழ்வியல் தளத்துக்கு நீதி, நிர்வாக, சட்ட உருவாக்க மையங்கள் பக்கச்சார்பற்றதாக அமைந்திருக்குமானால் அந்த இனத்தின் எழுச்சியைத் தடுக்கவோ ஒடுக்கவோ முடியாததாகிவிடும்.

இந்நிலையில் சிறுபான்மை இனமொன்றின் மீது பிரயோகிக்கப்படும் ஒடுக்குமுறையில் இருந்து, காக்கும் காலவர்களாக அவர்களை பிரதிநிதிப்படுத்தும் அரசியலாளர்களே இருக்க முடியும்.

இல்லையேல் அதிகார மோகங்கொண்ட பெரும்பான்மை இனத்தால் ஒடுக்கப்பட்டு, திட்டமிட்டு புகுத்தப்படும் மறைமுக மற்றும் நேரடி விடயங்களால் குறித்த பகுதியிலோ அல்லது நாட்டிலோ வாழும் சிறுபான்மை குழுமங்கள் பாதிப்படைந்து, அவர்களின் வரலாறுகள் திரிபடையச் செய்யப்பட்டுவிடும்.

இலங்கையை பொறுத்தவரையில், தமிழர் பகுதிகளில் தொல்லியல் இடங்களை, பௌத்தம் சார்ந்த தொல்லியல் இடங்களாகத் திரித்து, தமிழ் மக்களின் வரலாற்று ரீதியான அடையாளங்களை மாற்றியமைக்க அரச இயந்திரங்கள் முனைந்திருப்பது வேதனைக்குரியது.

எனவே, இவ்வாறான சந்தர்ப்பங்களில் தமிழ் மக்களின் அரசியல் தளத்தில் தம்மை நிறுத்தியுள்ள அரசியலாளர்கள் சிலர், அரசாங்கத்தின் செயற்பாட்டுகளுக்கு ஆங்காங்கே தமது எதிர்ப்பை வெளிப்படுத்தி இருந்தபோதிலும் அதன் தாக்கம் அரசாங்கத்துக்கு போதுமான அழுத்தம் கொடுக்கும் வகையிலானதாக அமைந்திருக்கவில்லை.

இந்த நிலையிலேயே கஜேந்திரகுமார் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அரசியல் களம், நிலைமாறா வேட்கை கொண்டதாக உருப்பெற்று இருந்தமை தென்பகுதியில் பெரும் கலக்கத்தை ஏற்படுத்தி இருக்கின்றது.

கஜேந்திரகுமாரின் கைது தொடர்பில் பாராளுமன்றத்தில் உரையாற்றிய சிங்கள பாராளுமன்ற உறுப்பினர்களின் கருத்துகள், கஜேந்திரகுமார் மீது அவர்கள் கொண்டுள்ள அச்சமான நிலையை, அவர்களது கட்சியினரின் செயற்பாட்டால் அரசாங்கத்துக்கு ஏற்பட்டுள்ள தளம்பல் போக்கை புடம்போட்டு காட்டியிருக்கின்றது.

எதிர்க்கட்சி தலைவரின் கருத்தின் பிரகாரம், "கஜேந்திரகுமாரின் அரசியல் கொள்கை எமக்கு ஏற்புடையதாக இல்லாத போதிலும்....." என ஆரம்பித்திருந்தது. அது ஒருபுறமிருக்க, ஆளும் கட்சியினர் கடும்போக்கு இனவாதக் கருத்துகளை முன்வைத்திருந்தனர். ஆளும்கட்சியில் இருந்த எந்தப் பாராளுமன்ற உறுப்பினரேனும் கஜேந்திரகுமாரின் கைதை கண்டிக்க தயாராக இல்லாத நிலை ஏற்பட்டு இருக்கின்றதெனில், வடபுலத்தில் அவரது அரசியல் செயற்பாடுகள் தென்பகுதியில் பெரும் பரபரப்பு மிக்கதாக இருக்கின்றது என்பதில் ஐயமில்லை.

வடக்கில் பல இடங்கள், இன்று தொல்லியல் திணைக்களத்தின் ஆளுகைக்கு உள்ளாக்கப்பட்ட நிலையில், அவை பௌத்த சின்னங்கள் கொண்ட இடங்களாகத் தெரிவிக்கப்படுவதும் அதற்கு முற்பட்ட காலம் தொடர்பில் ஆராய தலைப்படாமையும் பெரும் கேடாகிப்போயுள்ள நிலையில், தற்போது தனியார் காணிகளுக்குள் வழிபாட்டு தலங்களை அமைக்கும் முனைப்பிலும் அரச அதிகார வர்க்கம் களமிறங்கியுள்ளமை, பொருளாதார முன்னேற்றத்துக்காக ஏங்கும் ஒரு மூன்றாம் நிலை நாடு என்ற வகையிலும் கவலைக்குரியதே!

அரச தலைவராக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்ற கையோடு, புலம்பெயர் தமிழர்கள் சிலரும் அமைப்புகளும் தடை நீக்கத்துக்கு உள்ளாகியிருந்த தருணத்தில், பல புலம்பெயர் முதலீட்டாளர்கள் இலங்கை நோக்கி தமது கவனத்தைச் செலுத்தியிருந்த தருணத்திலேயே இலங்கையில் பல துன்பகரமான செயற்பாடுகள் அரங்கேறி வருகின்றமை அவதானிக்கத்தக்கது.

அதிலும் புலம்பெயர் தமிழர்கள் மத்தியில் அதிக செல்வாக்குள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரைக் கைது செய்தமை, கடும் பாதிப்பாகவே இருக்கப்போகின்றது என்பதையும் இலங்கையின் தென்பகுதி அரசியலாளர்கள் எதிர்வரும் காலங்களில் உணரத்தலைப்படுவர்.

கஜேந்திரகுமார் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, வடக்கில் அரசியல் ரீதியாக சற்று தளர்வடைந்திருந்த நிலையிலேயே, பொலிஸாரின் அண்மைய செயற்பாட்டின் மூலமாக, அவர்களின் அரசியல் இயக்கத்தை உயர் தளத்துக்குக் கொண்டு சென்று நிறுத்தியுள்ளனர் என்பதில் மாற்று கருத்தில்லை.

கடந்த சில காலமாக வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ் மக்கள் சிலரின், அதிலும் இளம் சமூகத்தினர் சிலரால் சமூக வலைத்தளங்களில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தொடர்பாக, விமர்சன கருத்துகள் பரப்பப்பட்டு வந்திருந்தன. குறிப்பாக, தையிட்டி விகாரை தொடர்பில் அவர்களால் மேற்கொள்ளப்பட்டு வந்த போராட்டத்தை கொச்சைப்படுத்தியும் அதன் ஆரம்பத்திலேயே அதனை கண்டுகொள்ளாத கஜேந்திரகுமார் அணி தற்போது அரசியல் நாடகமாடுகின்றது எனவும் பல விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன.

எனினும் அதற்கு பதிலடி கொடுத்தாற் போல், அக்கட்சியின் இளைஞர்கள் கருத்துகளை வெளியிட்டு வந்திருந்தாலும் அது போதுமானதாகவும் கட்சி ரீதியான விமர்சனத்தைப் போக்கக்கூடியதாகவும் இருக்கவில்லை.

இந்நிலையிலேயே மருதங்கேணியில் கஜேந்திரகுமார் தலைமையில் இடம்பெற்ற விளையாட்டுக்கழக வீரர்களுடனான கலந்துரையாடலில் சிவில் உடையில் வந்த பொலிஸ் புலனாய்வாளர்களுடன் ஏற்பட்ட முரண்பாடும் அதன் பின்னர் இடம்பெற்ற பொலிஸ் அதிகாரியுடனான முரண்பாடுகளும் அரசியல் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

இதன் தொடர்ச்சியாகவே கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட நிலையில், அவரது சிறப்புரிமைகள் தொடர்பில் கேள்வி எழும்பத்தொடங்கியுள்ளது.

இவ்வாறிருக்கையில் வடக்கு, கிழக்கில் ஏற்பட்டுள்ள இவ்வாறான மறைமுக வரலாற்று திரிபுபடுத்தல் திட்டத்தை சரியான முறையில் தமிழ்ப் பிரதிநிதிகள் எவ்வாறு கையாளப்போகின்றனர் என்பது தொடர்பில் ஆராயப்படவேண்டும்.

வெறுமனே கஜேந்திரகுமார் தலைமையிலான அணியின் தலையில், ஏனைய தமிழ்க் கட்சிகள் கட்டியடித்து விடப்போகின்றனரா அல்லது ஓரணியாக களத்தில் இறங்கி ஒட்டுமொத்த தமிழ் மக்களின் குரலாக ஒலிக்கச்செய்யப்போகின்றனரா என்பது பலரது ஆதங்கமாகும்.

இந்நிலையில் குறுந்தூர் மலை, வெடுக்குநாறி மலை, தையிட்டி விவகாரங்களில் ஒவ்வொரு தரப்பினரும் தனித்தனியாக களத்தில் இறங்கி எதிர்ப்பை காட்டுவதன் ஊடாக, தமது கட்சிகளுக்கான ஆதரவை பெருக்கி கொள்ள முடியுமே தவிர, தமிழ் மக்களின் வரலாற்று அழிப்பை தடுத்து விட முடியாது என்பதை தமிழ் அரசியலாளர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

வெறுமனே கஜேந்திரகுமாரை கைது செய்து, தமிழ் மக்களின் உரிமைக்கான குரலை நசிக்கிவிட முடியும் என்ற அதிகார வர்க்க இயந்திரங்களின் எண்ணத்தை மாற்றியமைத்து, தமிழ் மக்களின் மீதான ஒடுக்குமுறைகளை தடுக்கவேனும் தமிழ் அரசியல் தலைவர்களின் ஒன்றிணைந்த பயணமும் கலந்துரையாடல்களும் இன்றைய சூழலில் தவிர்க்கமுடியாததாகிவிட்டன.





# 'கோடி அற்புதர்' புனித அந்தோனியாரின் பெருவிழா

**திருமதி அ. மேரி சுனித்தா**



ஜூன் 13ஆம் திகதியாகிய இன்று, 'கோடி அற்புதர்' எனக் கொண்டாடப்படும் புனித அந்தோனியாரின் திருவிழாவாகும். கண்டி, கொச்சிக்கடை, பாசையூர், மானிப்பாய் போன்ற பிரபல்யமான அந்தோனியார் தேவாலயங்கள் உட்பட பெரும்பாலான அந்தோனியார் தேவாலயங்கள் இன்று புனித அந்தோனியாரின் திருவிழாவை கோலாகலமாகக் கொண்டாடுகின்றன.

1231ஆம் ஆண்டு, ஜூன் மாதம் 13ஆம் திகதி, இறுதி திருவருட்சாதனங்களைப் பெற்றபின்னர், இறைவனில் இளைப்பாறிய தினத்தையே புனித அந்தோனியாரின் திருவிழாவாகக் கொண்டாடப்படுகின்றது.

புனித அந்தோனியார் போர்த்துக்கல் நாட்டவர். 1195 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 15ஆம் திகதி லிஸ்பன் நகரில் பிறந்தார். அவரது பெற்றோர்கள் மார்டின், மேரி; இவர்களுக்கு முன்றாவதாகப் பிறந்த குழந்தைக்கு பெர்டினாந்து என்று பெயரிட்டனர்.

சிறு வயதிலிருந்தே இறை பற்றில் திளைத்து வளர்ந்த பெர்டினாந்து, ஒருநாள் தேவாலயத்தில் உருக்கமாக செபித்துக் கொண்டிருக்கும் போது, திடீரென்று பயங்கர உருவத்தில் அலகை தோன்றியது. சிறுவன்அஞ்சி ஓடவில்லை; மனத்துணிவுடன், தான் முழந்தாளிலிருந்த சலவைக் கல்மேல் திருச்சிலுவை அடையாளத்தை வரைந்தான். பிசாசு வெகுண்டு ஓடியது. அந்தக் கல்லில் பதித்த திருச்சிலுவை அடையாளத்தை இன்றும் காணலாம்.

புனித அகுஸ்தின் துறவறசபையில் சேர்ந்த பெர்டிணாண்டு, 1219ஆம் ஆண்டில் 24 ஆம் வயதில் குருப்பட்டம் பெற்றார். 1221ஆம் ஆண்டு புனித அகுஸ்தீன் சபையை விட்டு விலகி, பிரன்ஸிஸ்கன் சபையில் சேர்ந்தார். அப்போதுதான், அந்தோனி என்று தனது பெயரை மாற்றிக்கொண்டார்.

மறையுரையாற்றுவதில் புகழ்பெற்ற அந்தோனியார், உள்ளத்தை ஊடுருவும் ஆழ்ந்த கருத்துகளை மக்கள் மத்தியில் பிரசங்கித்தார். தாம் வாழ்ந்த காலத்திலும் இறப்புக்குப் பின்னரும் கடவுள் அளித்த கொடையால் அனேக புதுமைகள் செய்தார். இதனால் 'கோடி அற்புதர் புனிதஅந்தோனியார்' என்ற சிறப்புப் பெயரைப் பெற்றார்.

அந்தோனியார் குழந்தை இயேசுவை காட்சியில் கண்டு கையில் ஏந்தியதாகவும் ஆகவேதான் படங்களில் அவரது கையில் குழந்தை இயேசுவும் மற்றொரு கையில் திருமறை நூலை வைத்திருப்பதாகவும் சித்திரிக்கப்படுகிறது.

'கோடி அற்புதர்', 'பதுவை பதியர்', 'பிசாசுகளை நடு நடுங்கச் செய்பவர்', 'காணாமல் போனவைகளை கண்டுபிடித்துக் கொடுப்பவர்' போன்ற அடைமொழிகளும் புனித அந்தோனியாருக்கே சொந்தம்.

புனித அந்தோனியார் இறந்து 336 ஆண்டுகளுக்குப் பின்னர், அவருடைய கல்லறை தோண்டப்பட்டபோது, அவருடைய நாக்கு மட்டும் அழியாமல் இருந்தது. அந்த நாக்கு, இன்றும் புனிதத்துவம் கெடாது பாதுகாக்கப்பட்டு வருகிறது. இந்த நாக்கின் ஒரு சிறு பகுதி, கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருத்தலத்திலும் பக்தர்களின் வழிபாட்டுக்கு ஏற்றவாறு, பாதுகாக்கப்பட்டுள்ளது.

கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருத்தலம் இன, மத வேறுபாடு இன்றி அனைவரும் வந்து வழிப்படும் புனித திருத்தலமாகத் திகழ்கின்றது.

கொச்சிக்கடை புனித அந்தோனியாரின் திருத்தல வரலாறு குறித்து, பல்வேறு ஆவணங்கள் காணப்படுகின்றன. போர்த்துக்கேயரால் இலங்கைக்கு பரப்பப்பட்ட கத்தோலிக்க மதம், ஒல்லாந்தரின் வருகையோடு கத்தோலிக்க மதத்தை வழிபடுவதில் தடைகள் ஏற்படுத்தப்பட்டன.

இக்காலப்பகுதியில் தான் கொச்சியிலிருந்து அந்தோணி என்ற கத்தோலிக்க மத போதகர் கொழும்புக்கு வந்தார். எனினும் துன்புறுத்தல்கள் காரணமாக, அவர் வியாபாரி போல் மாறுவேடமிட்டு, பகலில் கடையில் (இன்றைய மலிபன் தெரு) மீன் விற்றார். இரவில் அவர் கத்தோலிக்கர்களை இனம் கண்டு வழிபாடுகளை நடத்தினார். சிறிதுகாலத்தில் இதை அறிந்த ஒல்லாந்தர்கள் அந்தோனியை தேடினர்.

மீனவ சமூகத்தினர் அதிகமாக வாழ்ந்த 'முஹுதுபொடவத்தை' என்ற பகுதிக்கு அவர் வந்தபோது, கடல் அரிப்பால் தாம் பாதிக்கப்படுவது பற்றி மீனவர்கள் அவரிடம் முறையிட்டனர். கடல் அரிப்பைத் தடுத்தால், டச்சு வீரர்களிடமிருந்து பாதுகாப்பதாகவும் அவர்கள் உறுதியளித்தனர்.

அந்தோணி மணலில் ஒரு சிலுவையை நட்டு, மண்டியிட்டு மூன்று நாள்களாக உண்ணா நோன்பிருந்து பிரார்த்தனை செய்தார். அவர் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தபோது, கடல் பின்வாங்கத் தொடங்கியது. அந்த இடம் தான், இன்றைய கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருத்தலம் அமைந்திருக்கும் இடமாகும்.

அந்தோணியின் அதிசயத்தை அறிந்த டச்சு ஆளுநர் வில்லெம் மௌரிட்ஸ் ப்ரூய்னின்க் (1739 - 1742), அதிசயம் நிகழ்ந்த நிலத்தை அந்தோணிக்கு வழங்கினார். அங்கே அவர் சிறு கடையையும் சமய பணியையும் மேற்கொள்வதற்கு ஆளுநரால் அனுமதி வழங்கப்பட்டது.

அந்தோணி, ஆரம்பித்த சிறு கடை, 'கடே' என்று அழைக்கப்பட்டது. கொச்சியில் இருந்து வந்தவரின் கடை என்பதால் 'கொச்சியாகே கடே' என்பது காலப்போக்கில் 'கொச்சிக்கடை' என அழைக்கப்பட்டது. இந்த நிலம் அதிகாரபூர்வமாக டச்சு கிழக்கிந்திய கம்பனியால் ஜனவரி 20, 1790அன்று, தேவாலயத்துக்கு ஒப்படைக்கப்பட்டது. அந்தோணி இறந்தபோது அவரின் உடலும் இந்தத் தேவாலயத்தில் அடக்கம் செய்யப்பட்டது. இன்று, நாம் காணும் புனித அந்தோனியாரின் சிறிய பீடம்தான், கடலரிப்பு அற்புதத்தின் போது மரச்சிலுவை நாட்டப்பட்ட இடமாகும்.

1806ஆம் ஆண்டு அத்திவாரம் இடப்பட்டு 1834ஆம் ஆண்டு புதிய தேவாலயம் கட்டும் பணி தொடங்கப்பட்டது. அந்த ஆண்டைத்தான் ஆலயத்தின் தொடக்க நாளாக இன்றுவரை கணிக்கப்பட்டுவருகிறது.

புனித அந்தோனியார் திருத்தலம் கத்தோலிக்க மக்களுக்கு மட்டுமன்றி அனைத்து இன, மத மக்களின் நம்பிக்கைக்கும் அபிமானத்துக்கும் உரியதாகும். தம்மை அண்டி வந்தவர்களை, புனித அந்தோனியார் வெறுங்கையோடு அனுப்ப மாட்டார் என்ற நம்பிக்கை அனைத்து மக்களுக்கும் உண்டு.

மனநலம், உடல்நலம், குடும்ப நலம், நோய்கள், பல்வேறு உபாதைகள் மற்றும் இன்னோரன்ன தமது பிரச்சினைகளை அந்தோனியார் கோவிலில் மண்டியிட்டு மன்றாடினால் தீர்வு கிட்டும் என்ற நம்பிக்கையை இந்த திருத்தலம் மக்களுக்கு உணர்த்தி வருகிறது.



கிருஷ்ணகிரி

# வனவாசம் சென்ற கிராமம்

கிருஷ்ணகிரியில் கூளியம் ஊராட்சிக்கு உட்பட்ட ஒப்பலகட்டு கிராமத்தில், சிறுவர்கள் மற்றும் இளம் வயதினரின் தொடர் மரணத்தால் குறித்த கிராம மக்கள் நிலைகுலைந்து போயுள்ளனர். இதனால் தங்களை தாங்களே காப்பாற்ற ஒன்றுகூடி முடிவு செய்து, மொத்த ஊரையும் காலி செய்து, ஊர் எல்லைத் தாண்டி ஒருநாள் வனவாசம் செல்ல முடிவெடுத்துள்ளனர்.

அதன்படி ஒருநாள் அதிகாலையில் ஊரில் இருந்து வெளியேறிய மக்கள், கிராமத்திற்குள் யாரும் சென்றுவிடாமல் இருக்க எல்லைப்பகுதியில் பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்துள்ளனர். இந்த நிலையில் ஊர் எல்லைகளில் ஆடுகளை பலியிட்டு பூஜைகள் செய்தபின் அனைவரும் தங்களது வீடுகளுக்கு முன்பாக கற்பூரத்தினை ஏற்றிவைத்துவிட்டு அவரவர் வீடுகளுக்குள் சென்றனர்.

இதுகுறித்து ஊர் பெரியவர்கள் கூறுகையில், “21 ஆண்டுகளுக்கு பிறகு ஊரில் மரணங்கள் பல அடிக்கடி நடந்துவருகின்றன. கிராமத்தில் தீயசக்திகள் புகுந்துள்ளதால்தான், இந்த மரணங்கள் நடத்துள்ளதாக தெரிகிறது. நாங்கள் அனைவரும் கிராமத்தை காலி செய்தால் தீயசக்திகள் கிராமத்தை விட்டு சென்றுவிடும்” என தெரிவித்துள்ளனர்.

கடலூர்

## மனைவிக்கு கப்பல் வீட்டை பரிசளித்த கணவர்




கடலூர் மாவட்டத்தில் தன் மனைவி விளையாட்டாக கப்பல் போன்ற வீடு தனக்கு வேண்டும் என்று கேட்டதற்காக கப்பல் போன்ற வீட்டினை வடிவமைத்து கொடுத்துள்ளார் அவரது கணவர். குறித்த கப்பல் வீடு 4 ஆயிரம் சதுர அடியில் வடிவமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் பிரம்மாண்ட கப்பல் போன்று தோற்றம் உள்ள இந்த வீட்டினைச் சுற்றி தண்ணீர் நிற்கும் விதமாக வழிவகை செய்யப்பட்டுள்ளது. வீட்டிற்குள் சென்றவுடன் கப்பலில் இருப்பது போன்று படிக்கட்டுகள் அமைத்து அதன் வழியாக 6 அறைகளைக் கட்டி பிரம்மாண்டப்படுத்தி உள்ளார்.

கடந்த இரண்டு வருடங்களாக குறித்த வீட்டினை கட்டும் பணி முன்னெடுக்கப்பட்ட நிலையில் தற்போது வீடு கட்டப்பட்டு புதுமனை புகு விழாவும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

## காதல் ஜோடிகள் உல்லாசமாக இருக்கத் தடை



நெதர்லாந்து, வீரேநகரில் காதலர்களின் சொர்க்கபுரியாக திகழும் புகழ்பெற்ற கடற்கரைக்கு தினமும் ஏராளமான பொதுமக்கள் வருவார்கள். விடுமுறை நாள்களில் ஏராளமான காதல் ஜோடிகளும் இங்கு வருவார்கள்.

காதலர்கள் தனிமையில் நெருக்கமாக அமர்ந்து கொண்டு சில்மிஷத்தில் ஈடுபடுவது உண்டு. சில காதலர்கள் மெய்மறந்து அத்துமீறுவதும் உண்டு. பக்கத்தில் யார் இருக்கிறார்கள் என்பதை மறந்து அவர்கள் நிர்வாணமாக உல்லாசத்திலும் ஈடுபடுவார்கள். கடற்கரைக்கு அருகில் இருக்கும் சிறு குன்றுகளை கூட காதலர்கள் விடுவது இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் அந்தக் கடற்கரைக்கு பொழுது போக்குவதற்காக குழந்தைகளுடன் வரும் பொதுமக்கள் காதலர்களின் செயல்களை பார்த்து முகம் சுழிக்கின்றனர்.

கடற்கரையை படுக்கை அறையாக மாற்றும் இந்த அத்துமீறல் குறித்து, வீரேநகர் மாநகராட்சிக்கு அடுக்கடுக்கான புகார்கள் வந்தன. இதையடுத்து வீரேநகர் கடற்கரையில் காதல் ஜோடிகள் உல்லாசமாக இருக்க தற்போது நெதர்லாந்து அரசு தடை விதித்துள்ளது.

கடற்கரையிலும் இது தொடர்பாக எச்சரிக்கை பலகை வைக்கப்பட்டு உள்ளது. தடையை மீறினால் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கபட்டு உள்ளது.


பிலிப்பைன்ஸ்

## எரிமலை வெடிப்பால் 13 ஆயிரம் பேர் வெளியேற்றம்



வடகிழக்கு பிலிப்பைன்ஸில் மயோன் எரிமலைக் குழம்பு தொடர்ந்து கசிந்து வருவதால் சுமார் 13 ஆயிரம் பேர் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

வரும் நாள்களில் மயோனின் அமைதியின்மை தீவிரமடையும் பட்சத்தில் அதிகமான மக்கள் வெளியேற்றப்படலாம் என நாட்டின் தலைமை எரிமலை நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.




## 2 நாள்களுக்கு இணையம் முடக்கம்


மணிப்பூரில் கடந்த 24 மணிநேரமாக வன்முறை சம்பவங்கள் ஏதும் இடம்பெறவில்லை எனினும், அமைதியை மீட்பதற்கான அனைத்து வகை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மணிப்பூரில் இருவேறு இனக்குழுவினர் இடையே மோதல் வெடித்து பெரும் வன்முறையாக வளர்ந்த சூழலில் இராணுவத்தின் உதவியோடு கலவரம் கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. கலவரத்தில் 100க்கும் மேற்பட்டோர் மரணமடைந்தனர்.

சுமார் 50 ஆயிரம் பேர் வீடுகளை விட்டு வெளியேறி 350 அரசு காப்பகங்களில் தஞ்சம் புகுந்துள்ளனர். சமூக விரோதிகள், சமூக ஊடகங்கள் மூலமாக வதந்திகளையும் போலி வீடியோக்களையும் பரப்புவதைத் தடுக்க 15 ஆம் திகதி வரை இணைய சேவைகள் யாவும் முடக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கீழ்வேளூர்

## தவில் அடித்து சிறுவன் அசத்தல்



கீழ்வேளூர் கோவில் திருவிழாவில் ஆறு வயது சிறுவன் நாதஸ்வர இசைக்கு ஏற்ப தவில் அடித்து அசத்தி உள்ளார்.

கீழ்வேளூர் யாதவ நாராயண பெருமாள் கோவிலில் நடந்த திருக்கல்யாண உற்சவத்தில் சிறுவன் வெங்கடேஷ் நாதஸ்வர இசைக்கு ஏற்றார் போல் தவில் அடித்து அசத்தி உள்ளார்.

பாடசாலை விடுமுறை நாள்களிலும், ஓய்வு நேரங்களிலும் தந்தையுடன் சுபநிகழ்ச்சிகளுக்கு வெங்கடேஷ் சென்று நாதஸ்வரம் வாசிப்பதை கவனித்து வந்துள்ளார். நாள்கள் செல்லச் செல்ல வெங்கடேசுக்கும் இசை மீது அதீத பற்று வந்துள்ளது. இதனால் அவ்வப்போது தவில் அடித்து பழகி வந்துள்ளார்.

பிரெஞ்சுப் பகிரங்க டென்னிஸ் தொடர்:

# சம்பியனான ஜோகோவிச்



பிரெஞ்சுப் பகிரங்க டென்னிஸ் தொடரில், உலகின் தற்போதைய முதல்நிலை வீரரான நொவக் ஜோக்கோவிச் சம்பியனாகியுள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதிப் போட்டியில் உலகின் நான்காம் நிலை வீரரான கஸ்பர் றூட்டை 7-6 (7-1), 6-3, 7-5 என்ற நேர் செட்களில் வென்றே தனது 23ஆவது கிராண்ட் ஸ்லாம் பட்டத்தை சேர்பியாவின் ஜோக்கோவிச் வென்றிருந்தார்.

அந்தவகையில் அதிக கிராண்ட் ஸ்லாம் பட்டங்களைக் கைப்பற்றிய ஐக்கிய அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸின் சாதனையை 36 வயதான ஜோக்கோவிச் சமப்படுத்தியுள்ளார்.

இதேவேளை, பெண்களில் செக் குடியரசின் கரோலினா முஞ்சோவாவை 6-2, 5-7, 6-4 என்ற செட் கணக்கில் வென்றே உலகின் முதல்நிலை வீராங்கனையான இகா ஸ்வியாடெக் சம்பியனாகியிருந்தார்.



## யுனைட்டெட் செல்லும் பிக்போர்ட்

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான எவெர்ற்றனின் கோல் காப்பாளரான ஜோர்டான் பிக்போர்ட்டுக்காக 30 மில்லியன் ஸ்டேர்லிங் பவுண்ஸ்கள் கோரிக்கையை இன்னொரு பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட் தயாராகியுள்ளதாகக் கூறப்படுகிறது.

யுனைட்டெட்டின் கோல் காப்பாளர் டேவிட் டி கியா கழகத்திலிருப்பதிலோ அல்லது வெளியேறுவதிலோ இந்நகர்வு தங்கியிருக்கவில்லை.



## செல்சி செல்லும் ஒனானா?


இத்தாலிய சீரி ஏ கழகமான இன்டர் மிலனின் கோல் காப்பாளரை ஒப்பந்தம் செய்யும் பொருட்டு மிலனுக்கு தமது முன்களவீரர் றொமெலு லுக்காக்கு, பின்களவீரர் கலிடு குலிபலியை வழங்க இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான செல்சி தயாராக இருப்பதாகக் கூறப்படுகிறது.

எவ்வாறாயினும், மிலனிலேயே தொடர விரும்புவதாக ஒனானா தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

சர்வதேசம் ஏற்கும் வகையில்

# இலங்கை கால்பந்தாட்ட சம்மேளன யாப்புக்கு அங்கிகாரம் வேண்டும்

■ ஆ.ரமேஸ்



இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்துக்கு முறையான சட்டமூலம் உருவாக்கப்படும்போது இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்துக்கும், சம்பந்தப்பட்ட அமைச்சுக்கும் இடையில் ஏற்பட்ட யாப்பு முரண்பாட்டுச் சண்டை சர்வதேச சமூகம் இலங்கைக்கு கால்பந்து தடை விதித்ததற்கு முக்கிய காரணம் என இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின் முன்னாள் தலைவர் ஜஸ்வர் உமர் நுவரெலியாவில் தெரிவித்தார்.

மேலும் கருத்து தெரிவித்த உமர், “சர்வதேச கால்பந்து மீதான தற்போதைய தடைக்கு முன்னர், சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனம் சில வருடங்களுக்கு முன் எச்சரிக்கை விடுத்தது.

எமது இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் ஆரம்ப நிலை அரசியலமைப்பை மாற்றியமைத்து கூடிய விரைவில் ஏற்றுக்கொள்ளக்கூடிய சர்வதேச தரத்திலான சட்டமூலத்தை கொண்டு வருமாறும் கேட்டுக் கொண்டது.

பல தடவைகள், கால்பந்தாட்ட சம்மேளனம் சட்டமூலத்தை திருத்துவதற்கு முயற்சித்த போதிலும், விளையாட்டுத்துறை அமைச்சு மற்றும் அமைச்சர் தரப்பினர் கொண்டுவந்த பல்வேறு முரண்பாடுகளையும் வாதங்களையும் நாங்கள் எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

எனினும், 2022ஆம் ஆண்டு மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் சட்டமூலத்தை ஏற்றுக்கொள்ள முடிந்தது. ஆனால் சர்வதேச கால்பந்து சம்மேளனத்தில் சட்டமூலத்தை சமர்ப்பிக்கும் போது அமைச்சால் கடும் இழுத்தடிப்பு இடம்பெற்றது. இதுவே சர்வதேச தடைக்கு முக்கிய காரணமாகவும் அமைந்தது.

தற்போதைய இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் பணிப்பாளர் சபை விளையாட்டு அமைச்சால் நியமிக்கப்பட்டுள்ள போதிலும், முன்னைய கால்பந்தாட்ட சம்மேளன பணிப்பாளர் சபை உத்தியோகபூர்வ அதிகாரிகள் என்பதை நாம் அரசாங்கத்திற்கு இதை ஞாபகப்படுத்த வேண்டும்.

சர்வதேசம் நம்பிக்கையுடன் ஏற்றுக்கொள்ள கூடிய சம்மேளனத்தின் யாப்புக்கு உரிய அங்கிகாரம் வழங்கப்பட வேண்டும்.இது மறுக்கப்பட்டு வருவதனால் கால்பந்தாட்டத்தில் ஈடுபட்டுள்ள ஆயிரக்கணக்கான உள்நாட்டு கால்பந்தாட்ட வீரர்கள் இத்தடையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதுபோன்ற நிலை நீடித்தால், கால்பந்து விளையாட்டில் பிரதேச, மாவட்ட அளவிலான வீரர்களும் பெரும் ஏமாற்றம் அடையும் வாய்ப்பு உள்ளது.

இப்பிரச்சினைக்கு விரைவான தீர்வாக, ஜனாதிபதியுடன் கலந்தாலோசித்து, இலங்கை கால்பந்து சம்மேளனத்துக்கான சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சட்டமூலத்தை தயாரிப்பதற்கு அனைத்து தரப்பினரின் இணக்கப்பாட்டையும் பெற்றுக்கொள்வதற்கான விரைவான ஏற்பாட்டை அரசாங்கம் மற்றும் விளையாட்டு அமைச்சால் எதிர்பார்க்கிறோம்.

அதேநேரத்தில் மலையக பிரதேசங்களில் இருந்து தேசிய,சர்வதேசிய ரீதியில் விளையாடக்கூடிய கால்பந்தாட்ட திறமையான வீரர்களும் பாதிக்கப்படுவதாக உணர்வதாகக் கூறினார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 13 ஜூன் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.